
# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் 11: இதழ்: 4

மா ச், 1959

விலை : ச



# அட்டைப் படம்



வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவேனாக்களிரண்டும் பல்கலைக் கழக அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்ட சம்பவம் இலங்கைச் சரித்திரத் திலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுமென்பதற்கைய மில்லை. ஆங்கிலேயரும், போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் இந் நாட்டை ஆக்கிரமிப்பதற்குமுன்னே [illegible]வேனாக்களே இத்தீவின் பிரதான கல்வி நிலையங்களாக விளங்கின. பௌத்த மதத்தைப் பரப்புவதற்காக இந்தியாவிலிருந்து இங்கு வந்த பௌத்த குருமார் கல்வி நிலையங்களைத் தாபித்து மதத்தைப் பரப்பியது மாத்திரமன்றி அறுபத்துநான்[illegible] கலைகளையும் போதித்தனர். இந்நாட்டின் மன்னர் களும், மதிமந்திரிகளும், இளவல்களும் இப் புத்த குருமார்களிடமே கல்விகற்றனர். பிரிவேனாக்களின் தலைமைப் பீடங்களை அக்காலத்தில் இங்குவந்திருந்த தமிழ்ப் புத்த குருமாரும் தாங்கியிருக்கின்றனர். மகாவம்[illegible] குறிப்பிடுவதுபோல் பிரிவேனாக்களில் தங்கி இவர்கள் கல்வித்துறையில் செய்த சேவைகள் அளப்ப[illegible]ன. இதனாற்றான்போலும் அக்காலத்தில் தமிழும் பிரிவேனாக்களின் நேர சூசியில் இடம் பெற்றது. [illegible]ர்மகீர்த்தி, காயசத்தி போன்ற பெரியார்கள் இந்நாட்டின் கல்வித்துறையில் முன்வரிசையில் நிற்கின்றனர். நாட்டில் தர்மத்தையும், பண்பையும் வளர்த்த இக்கலா பீடங்கள் மீண்டும் பழைய நிலைக்கு உயர்த்தப்பட்டது குறித்து நாம் பெருமைப்படவேண்டும். உத்தியோகப் பூர்வமாக நடத்தப்பட்ட வித்தியோதய பல்கலைக்கழகத் திறப்புவிழாவின்போது துணைவேந்தர் பண்டித வெலிவிட[illegible] சோரத தேரர் பேசுவதையும், மகாதேசாதிபதி அவர்களும், பிரதமரும் வீற்றிருப்பதையும் அட்டைப்படம் காட்டுகிறது.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அடுத்த பொதுத் தேர்தல் பின்போடப்படமாட்டாது .. .. | 3 |
| 2. | திரௌபதி சுயம்வரம் .. .. .. | 5 |
| 3. | நெற்காணிச் சட்டத்தின் முதலாவது ஆண்டு நிறைவு .. .. | 9 |
| 4. | நெற்காணிச் சட்டம்—பிரதமரின் செய்தி .. .. .. | 9 |
| 5. | நெற்காணிச் சட்டத்தின் வெற்றி .. .. .. | 10 |
| 6. | உற்பத்திக்குறைவின் காரணம் .. .. .. | 11 |
| 7. | குடிசைக் கைத்தொழில் .. .. .. | 12 |
| 8. | வித்யோதய பல்கலைக் கழகம் .. .. .. | 16 |
| 9. | குடித்தனமும் இரசாயனமும் .. .. .. | 18 |
| 10. | பொதுசனப் பாதுகாப்புத் திருத்தச் சட்டம் .. .. | 22 |
| 11. | புராதன யாழ்ப்பாண நாணயங்கள் .. .. .. | 26 |
| 12. | தொழில்களை இலங்கையர் மயமாக்குதல் .. .. | 28 |
| 13. | அபிதானகோச ஆசிரியர் .. .. .. | 29 |


J. N. R 971—5,509 (3/59)



இரத்தினபுரி கிராம அபிவிருத்திச் சங்க வருட மகாநாட்டில் பிரதமர் சொற்பொழிவாற்றுகிருர்.


# அடுத்த பொதுத் தேர்தல் பின்போடப்படமாட்டாது

—பிரதமர்

இரத்னபுரியில் மார்ச் மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற கிராம அபிவிருத்திச்சங்க மகாநாட்டில் பேசுகையில், "அடுத்த பொதுத் தேர்தலைப் பின்போடும் நோக்கம் எனக்கில்லை" எனக் குறிப்பிட்டார். மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது :

1948ம் ஆண்டில் இலங்கை அரசியற் சுதந்திரம் பெற்றது. இது ஒருவகைச் சுதந்திரம். பெப்ருவரி மாதம் 4ந் திகதியன்று சபையின் முதல்வர் என்ற முறையில் நான் பேசியபொழுது, காகிதத்தில் மாத்திரம் தந்திரம் கிடைத்திருக்கிறது. சுதந்திரத்தின் சரியான பலனைப் பெற அதைப் பூரண சுதந்திரமாக்க வேண்டும். பொருளாதார அபிவிருத்திக்கு, கைத்தொழில் அபிவிருத்திக்கு சுதந்திரம் கிடைத்தல் வேண்டும். சுகாதாரத்துறையில், கல்வித்துறையில் மற்றும் துறைகளில் சுதந்திரம் கிடைத்தல் வேண்டும். அதுதான் உண்மையான சுதந்திரம்" என்று அன்று குறிப்பிட்டேன். அதனையே மீட்டும் உங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

கடந்த மார்ச் மாதம் 3ம் திகதி நடைபெற்ற அடையாள வேலைநிறுத்தம் படுதோல்வியடைந்ததை நீங்கள் அறிவீர்கள். இனத் துவேஷத்தை வேரோடு களையவும், கலகம் ஏற்படும் இடத்தில் மாத்திரம் அவசர கால நிலைமையைப் பிரகடனஞ் செய்யவும் அரசியல் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்படும் வேலைநிறுத்தங்களை



இரத்தினபுரியில் நடைபெற்ற கிராம அபிவிருத்திச் சங்க வருட மகாநாட்டில் கலந்துகொண்ட பெருந்திரளான மக்களின் ஒரு பகுதி.

ஒழித்துக் கட்டவும் பொதுசனப் பாதுகாப்புச்சட்டம் உதவி புரியும் என்பதை எனது பகைவர்கள் உணர்ந்திருக்கிறபடியாற்ருன் அவர்கள் இந்தச் சட்டத்தை எதிர்க்கின்றனர்.

மொழி விஷயத்தில் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிப்பது பெரும்பான்மையினரின் கடமையாகும். இதற்காகவேதான் நியாயமான அளவுக்குத் தமிழ் உபயோகம் என்ற மசோதா கொண்டுவரப்பட்டது.

எஸ். எஸ். சி. பரீட்சையிற் சித்தியெய்திஞேர் தாங்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் கஷ்டப்படுவதால், தங்களுக்கு வேலை தரும்படி கோருகின்றனர். அவர்களுடைய கோரிக்கை நியாயமற்றதாகும். ஏனெனில் வேலையில்லாமல் இருக்கின்ற எத்தனையோ பேரைப் புறக்கணித்து, இந்த எஸ். எஸ். சி. பரீட்சையிற் சித்தியெய்திஞேரின் வேலையில்லாத் திண்டாட்டத்தை மட்டும் கவனிக்குமாறு அவர்கள் கேட்பது சரியல்ல.

இரத்னபுரிக்குச் செல்லும் வழியில் பிரதமருக்கு எகொலியகொடையில் குதூகல வரவேற்பு உபசாரமொன்று அளிக்கப்பட்டது. இரத்னபுரியில் மொரகாயட்டைச் சந்தியில் கலாசார அமைச்சர் திரு. ஜயவீர குருப்பு மாகாண அதிபர் ஆகியோர் பிரதமரை வரவேற்று ஊர்வலமாகக் கூட்டம் நிகழும் இரத்னபுரி மைதானத்துக்கு அழைத்துச் சென்றனர்.

*நாடோடி இசைச்சித்திரம்: 4.*

# திரௌபதி சுயம்வரம்

*(அருள் செல்வநாயகம்)*

நாடறிந்த கதை பாரதக்கதை. எந்தக் கதையைத் தான் படிக்காதுவிட்டாலும், பாரதக்கதையைப் படிக் காதவர்கள், கேட்காதவர்கள் இருக்கவே மாட்டார்கள். பல காண்டங்களைக்கொண்ட பாரதக்கதை, அதிகமான சிறு கதைகளாகக் கோக்கப்பட்டுள்ளது. அப்படியான கோவையினுள் திரௌபதி சுயம் வரமும் ஒன்றாகும்.

வில் வல்லனை அருச்சுனனுக்கு திரௌபதி மாலை யிட்டாள். திரௌபதியுடன் பிறந்த வில்லை வளைத்து நாணேற்றி, சுழலும் இலக்கை அறுப்பவருக்கே திரௌபதியைக் கொடுப்பதென்று, அவளைப் பெற்ற தந்தை நியதியை ஏற்படுத்தினர். நியதி பூரணமாக சுயம் வரத்தினுக்கு ஏற்பாடு செய்தான். அந்தச் சுயம் வர விழாவிலே, வில்லை வளைத்து வெற்றி ஈட்டியதினால் அருச்சுனன் திரௌபதியைப் பெற்றான்.

மாலையிட்ட கன்னி திரௌபதியை மகிழ்ச்சியாக அழைத்துக்கொண்டு தாயிடம் வந்தான் விசயன். 'கனி யொன்று கொண்டுவந்தே' னென்று, விசயன் சொல்ல குந்தி ஐவருமாக உண்ணுமென்றவாறு வெளியே வந்து பார்த்தபோதுதான், தன்தவறுக்கு வருந்தினாள். விசயன் தாயைத் தேற்றி, தங்களது ஆணையின்படி திரௌபதியைப் பாண்டவர்க்கு மனைவியாக்கினான். இதுதான் திரௌபதி மாலை இட்ட கதை. இந்த அழகிய கதையைக் கற்பனை நயத்துடன் கிழக்கு இலங்கை மக்கள் இசைத் தமிழிலே ஊஞ்சற் கவிதையாக இசைத்துள்ளார்கள்.

புதுவருடப் பொன்னாளிலே கிழக்கு இலங்கையில் வானளாவப் பறக்கும் ஊஞ்சல்களிலிருந்து எத்தனை யோ வகை வகையான ஊஞ்சற் கவிதைகள் எழும். ஆமாம், அதோ அந்த ஊஞ்சலிலே திரௌபதி மாலை யிட்ட கதை ஊஞ்சற் கதையாக எழுகிறது. நாமும் அங்குசென்று அவர்களுடன் கலந்து திரௌபதி சுயம் வரத்தைக் கேட்போம். கவிதைகளுக்கு இசைவரம்பான தரு முதலில் எழுகிறது.

> தனனதன தனனதன தனனதன தனன
> தனன தனதந்தன தந்தனன

தருவென்னும் தாளக் கட்டுவரப்பினைத் தொடர்ந்து, திரௌபதி சுயம்வர ஊஞ்சலுக்கு முதன் முதலில் இறைவணக்கம் எழுகிறது.

1. சீருலவு பாஞ்சாலராச முன்னின்ற
   திரௌபதி சுயம்வரந்தன்னை ஊஞ்சலெனும்
2. ஏருலவு கவிதை தனையே பாடி ஆடி—
   இன்பமுறுதும் பிமுகவன் துணையதாமே
3. துணையாகவே வந்து பன்னுவரை வேட்ட
   தோகைதன் சரிதை தனையே பாடுதற்கு
4. அணைதுயிலும் அரியும் அயனும் பிரமனும்
   ஆறு முகனு மீஸ்வரியும் அருள்புரிகுவரே.
5. ஈசனருளப்பெற்ற பாஞ்சாலி தனக்கு
   இன்பமுடனே மணமுடிக்கவென்றெண்ணி
6. ஆசையுள்ள பஞ்சவர் அரக்கு மாளிகையில்
   அவியவில்லை யென்று முனிவர்களாலாய்ந்து.

பாண்டவர்கள் வசித்த அரக்கு மாளிகைக்கு துரி யோதனனுதியர் தீயிட்டனர். அத்தீயிலிருந்து பாண்ட வர்கள் தப்பிவிட்டார்களென்பதை அறிந்த பாஞ்சால மன்னவன், திரௌபதியின் சுயம்வரத்தினுக்காக மன்னவர்களுக்கு ஓலை போக்கி, நகரைச் செப்பமுடன் அலங்கரித்தான்.

திரௌபதிக்குச் சுயம்வரம் என்பதை அறிந்த கிருஷ்ணர், அந்தணர் வடிவுகொண்டு பாண்டவர் களிடம் வந்து விசயத்தைச் சொல்லி, பாஞ்சால நாட்டை நோக்கி அனைவரும் புறப்பட்டனர். வழியிலே வியாச முனிவர் அவர்களைக் கண்டு, திரௌபதியை மணக்கும்படி ஆசி கூறினர்.

7. தேச தேசங்களெங்கும் பறையறைந்து
   திறமையுள்ள திருமுகம் தனை யெழுதிவிட்டார்.
8. பேசுகட்டியர்கள் முதலானவர்களப் போ
   போனான்தன்னகர் அலங்கரித்தன ரே.
9. துன்று கொடிகுடை கவுரியெங்கணு நெருங்க
   சொருசாகவே நகாலங்கரித்தனரே.
10. பகனை வதை செய்து பார்ப்பாருடனிருந்த
    பஞ்சவர்களறியவே பகருவோமென்று.
11. அகமிக மகிழ்ந்து நாரணனுமப்போ
    அந்தணவடிவு கொண்டவர்குரைத்து.
12. மிக விரைவதாகவே நடவுமென வோத
    மேன்மையுடனே யவர் முன்சென்றார்.
13. இருந்த வேதியர்களுட னைவருமப்போ . .
    இனிதான காடு பல தாண்டி வருகையிலே
14. திருந்திய வியாசமுனி அவர்கள் முன் சென்று
    திரௌபதி தேவியைக் கைப்பிடியு மென்றார்.

15 சுருதி முறையாகவே உப தேசமிட்டு
கோராமலே நீங்கள் துரிதமாய்ச் சென்று

16. பருதி வெளியாகுமுன் சபை யடையுமென்று
பண்பான வேதமுனி தான் பகர்ந்தார்.

17. வேதமுனி போனபின் விப்ருமப்போ
விசயனுடன் கைவிளக்காகவே ஏகி

18. மோதி துரம் சித்ராஸ்கதனையும் வென்று
முன்னான புன்னதிகளெல்லாம் கடந்தார்.

19. கடந்துவரும் வேளையிலே பல்லியம் முழங்க
கானமுதலான பலகடல் போலொளிக்க.

20. அடர்ந்து முனிவர்களுடன் ஐவர்களுமப்போ
அகழிசூழ் கோபுர வாசல் கண்டனரே.

21. கண்டபொழுதே யவர்கள் கஞ்சனைவதைத்த
கரியமால் பதமலரை மனமதிலிருத்தி.

22. தொண்டைவாய்ப் போழகியாற் சோபமுற்று.
துரிதமுடனே வேந்தர் சூழ் சபையில் வந்தார்.

சுயம்வர மண்டபத்தே வேந்தர்கள் அனைவரும் சூழ்ந்திருந்தார்கள். அப்போது தோழிப்பெண்கள் பாஞ்சலியை அலங்கரிக்கலானார்கள். கங்கை நீரால் நீராட்டி, பட்டாடைகளை அணிந்து, வைர நகைகள் பூட்டி, சுயம்வர மாலையைக் கையிற் கொடுத்து, வேந்தர்கள் சூழ்ந்திருக்கிற சபைக்கு திரௌபதியை அழைத்து வந்தார்கள். திரௌபதியைக்கண்ட மன்னவர்கள், அவளது அழகிலே மயங்கினார்கள். எனக்குத்தான் திரௌபதி என்றவ்வாறு மன்னவர்கள் எண்ணலானார்கள். கதையின் புதுமைத் தொடர்பு. ஆகவே தருவும் மாற்றமடைகிறது.

தந்தனத்தான தனனதன தந்தன தந்தன
தானானா—தன
தந்தனதானா தன்னாதனதந்தை தந்தனதானானா

தருவைப் பின்பற்றி, அதன் பண்பினுக்கியையக் கதை தொடர்கிறது.

23. வேதர்கள் யாவரும் மேவியிருக்கவே வேள்வியில்
வந்துதித்த—அந்த
மின்னையார் தமைக் கங்கை நீரால் முழுக்காட்
டினர் கைத்தாயர்.

24. கூந்தலிற் சீப்புமிட்டுக் கோதி முடித்துக் குலறியே
மைதீட்டி——நல்ல
கோலமதான பட்டாடை உடுத்தியே கெங்கையிற்
கச்சையணிந்து.

25. கந்தங்கமழ் அகில் அம்பிகை ஊட்டிதாமமுதான்
ஊட்டி—ஒளிர்
தங்கவளை முதலான பலவணி தாங்காமலே
யணிந்து.

26. வந்திடும் மன்னவர் ஆண்மை குறைந்திட
மன்மதன் போர்விளக்க—
மங்கையர் கொண்டு செவிலியர் நற்சபை மகிழ்
வொடு நின்றனரே.

27. நின்றதோர் பாவையை மன்னவர் கண்டு
நெருப்பினில் நெய்யெனவே—அங்கு
நெடு நேரமாகவே மூச்சை தெளிந்து நினைவுற்று
எல்லோரும்.

28. இன்று திரௌபதி எந்தனுக்கு மணமாலை
சூட்டுவளே—என
எண்ணியிருக்கையில் திட்டத்துய்மன் ஏந்த
லெழுந்துரைப்பா.

29. அன்று பிறந்ததோர் வில்லை வளைத்ததில் அம்பு
தனைச் செலுத்தி—நல்ல
அற்புதமான தோர் மச்ச வடிவதை அறுப்பவர்
யாரெனினும்.

30. துன்னு மென் தங்கையை கைப்பிடித்தீரென்று
சொல்ல அலரிகளும்—பொல்லா
தொல்லிடியேறதைக் கேட்டிடும் பாம்புபோல்
சோர்ந்து மயங்கினரே.

31. சோர்ந்து மின்னாசையாற் பின்னும் தெளிந்து
துரைராசர் தானிருக்க—அந்தத்
தோகை திரௌபதி யானக்கலர்களைச் சுட்டியே
காட்ட என்றார்.

அதோ 'ஆண்மையுடன் இருக்கிறானே' அவன்தான் மன்னவன் துரியோதனன். அவனைச் சூழச்சுற்றியிருப்பவர்கள் அவனது தம்பிமார்கள் நூறு பேர்களுமாகும். அவர்களுக்கும் பக்கத்திலே இருப்பவர்தான் சூது செய்வதிலே நிகரற்றவரான சகுனி. அதோ, அவன்தான் ஆசாரியன் மகனான பரித்தாமன். பாண்டவரைப் போல் பேரும் புகழும் வன்மையும் கொண்டவனவன். அடுத்து இருப்பவன்தான் திருமால். பக்கத்தே திருமாலின் தம்பி சாத்தகி இருக்கிறான். இவர்கள் மட்டுமா, பகதத்தன் சல்கியன், நீலன், சேரன், சோழன், பாண்டியன் ஆதிய மன்னவர்கள் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் உனது சுயம்வரத்தினுக்காகவே வந்திருக்கிறார்கள். எவர் வில்லை வளைத்து சுழலும் இலக்கை அறுக்கிறாரோ, அவருக்குச் சுயம்வர மாலையைச் சூட்டி மகிழ்ந்திருமென்று, தோழிப்பெண் ஆசி கூறினாள்.

32. ஆசை பையில் அகமெரிகாலவே ஆண்மையுட
னிருப்போன்—அந்த
அம்பகமில்லா அரசன் புதல்வன் அவன் பெயர்
சுயோதனன்.

33. பேர் பெறும் பூமியைத் தாங்கிய சேடன்
பெருத்த தலையதுபோல்—வந்து
பேணியே சுற்றியிருக்கிற மன்னவர் பேராளன்
பின்னவர்கள்.

34. சீரில்லா வஞ்சகச் சூது முதலிய செய்கை தனை
யுடையோன்—மிகச்
செம்புகாந்தார தேசத்தையாண்டிடும் தீய
சகுனியிவன்.

35. ஆண்டவனைப்போல் வடிவமும் தேசும் ஆண்மை
யுமுடையோன்—எங்கள்
ஆசாரியென்றிடும் மைந்தனிவன் பெயர் ஆகும்
பரித்தாமன்.

36. பாண்டவரைப் பார்க்க யுத்தவலியும் பற்றும்
கொடையுமுளோன்—எங்கள்
பார்மன்னர் கீர்த்திக்குச் சூரியன் புத்திரன்
பாங்குள்ள கன்னனிவன்.

37. மன்னர் புகழ் வசுதேவன் புத்திரன் வாகுபெறு
வலியோன்—எம்
மாதவன் முன்வந்த வேதமிலான் பலதேவனிவன்
காணும்,

38. திருமாலின் தம்பி திறனுடைச் சாத்திகி என்னு
மரசனிவன்—அந்தத்
தேவனுடன் மிகவாது புரியும் சிசுபாலராசனிவன்.

39. மருவியே அச்சுதனோடு பொருது மதுரை
யில்லாமலவர்—அந்த
வண்ணமுறு துவாரா புரியாளவே வைத்திடும் வீர
னிவன்.

40. வீரனிவன் பகதத்தனிவன் பெயர் மிக்கானசல்லி
யனும்—இவன்
வேகமுறு நீலன் வேண்டுமிவன் சேரம் வேந்த
னிவன் சோழன்.

41. ஆரமணித்தவடல் வழுதி முதல் ஆகவே மற்ற
வரும்—மிக
ஆசையுடன் வந்து சூழ்திருக்கிறார் ஆயிழையே
பாரும்

42. சூளும் காம்புவில் மன்மதன் போலொளி துன்னு
மிம்மன்னரெல்லாம்—இப்போ
சொல்லுமுந்தன் பொருட்டாலிங்கு வந்தோர்கள்
தோகையே கேளுமம்மா.

43. ஏழனம் பண்ணுமலே இந்தவில்லினை யசைத்
தோர் நாணதனை—நன்றாய்
ஏற்றித் தொடுத்ததில் கூற்று உன் போலம்பு
ஏகமாய்த்தான் செலுத்தி

44. அம்பு செலுத்தயேபம்பரம் போல் நின்ற
வானிற் சுழலிலக்கை—இப்போ
அச்சமில்லாமல் அறுத்து விழுத்தும் அரசரெவ
ரெனினும்.

45. வம்பு செறிந்திடும் மாலையைச் சூட்டி மணம்
செய்து கொள்ளும்—என்று
வண்ணமகளும் குரைத்து செவிலியர் வாழ்த்தி
விடைகொடுத்தார்.

திரௌபதியை இலகுவில் பெறமுடியாது. வில்லை வளைத்து, சுழலும் இலக்கை அறுத்துத்தான் பெற முடியும் எனக் கண்ட மன்னவர்கள், மனக்கிலேசம் கொண்டாலும்ணைத்தினுல் வில் வளைக்க முனைந் தார்கள்.

மகத மன்னவனுன சல்லியன் எழுந்து வில்லை யெடுத்து நாணேற்றினுன். அவ்வளவுதான் வில்லின் விசையினுல் அடியுண்டு கீழே விழுந்தான். மகத மன்னன் விழ சராசந்தன் எழுந்தான். வில்லைத்தூக்கி நாணை எடுக்க முன்னரே வில்லால் அடிபட்டு விழுந் தான். பின்னர் மாமன்னன் மாகதன் எழுந்து வில்லை வளைத்து மார்பளவாகவே கொண்டுவந்தான். அவ்வ ளவுதான். நீலன் வில்லை ஒரு சாண் அளவினுக்கு வளைத்தான். துரியோதனுதியார், கன்னர் ஆதியோ ரெல்லாம் வில்லை வளைத்தும் வெற்றி ஈட்ட முடியாமல் துவண்டார்கள். கதையின் புதுத்திருப்பம். ஆகவே தருவும் மாறுகிறது.

தனனனதந்தோம் தந்தை தானதனந் தோம்
தந்தை
தானதனு தனதானு தனதனதனே தந்தோம்
தனதான

தருவைப் பின்பற்றி அதற்கேற்பக் கவிதைகள் தொடர்கின்றன.

46. விடையகமகிழ் வோடருள் மடமயிலாசை மிஞ்ச
வேளமெனச் சில வேந்தர்கள் கூடியே வில்
வளைக்க எண்ணினரே.

47. அருந்திறனுடைய மகத அதிபதி புதல்வனுன
அழகுறு சல்லித அரசனும் மகிழ்வுடன் அந்த
வில்லின் நாணேற்றி.

48. வில்லுடனேதான் தனது கல்லெனும் மங்கம்
நோவ
வீழ்ந்து மயங்கி யெழுந்தவனேகி—வேந்து
சரசந்தோன் என்போன்.

49. பல்வலியுடன் தனுவைப் புல்கி யெடுத்து மிக
மறுகையில் மகிழ்வொடு நாலடி நாணதை
வாங்கு முன்புய முடைந்தாள்.

50. புலமது நொந்துபோக பூகதனை வன்றே
புரவலர் முதலிய பகைவர்கள் போற்றுகிற
மரகதனும்.

51. சய முடன் தான் வந்து தனுவையெடுத்து மேலே
தாங்கிய நாணதை மார்பளவாகவே வேதவனும்
கொண்டுவந்தான்.

52. அழகுறு நீலன் சபையில் அரசர் துதிக்க நாணை
அணிதிகழ் வில்லொரு சாணெனவே அங்கதனும்
வாங்கி நின்றான்.

53. பழகிய துரியோதனும் உளமகிழ்வுடன் தனுவில்
பண்புறு நாணதை நால் விரலெனவே பாங்குட
னேதான் வளைத்தான்.

54. பாங்கொடுகன்னன் வந்து தாங்கிய வில்லைத்
தூக்கி
பகரணி நாணதை வெற்றி மிகுத்திட பண்
புடனேதான் வளைத்து.

55. ஆள்கணி வில்லின் காலால் அடிபடவே தான்
நல்ல
அழகிய தலையது சிதறிடப் பூமியில் அங்கவனும்
தான் வீழ்ந்தான்.

இவ்வாறாக அங்கு வீற்றிருந்த மன்னவர்களெல்லாம் வில்லை வளைத்து வெற்றிகாண முடியாது சோர்ந்து போனபோது, அந்தணவடிவிலிருந்த அருச்சுனன் ஆண்மையுடன் எழுந்தான். அந்தணரும் வில்லை வளைக்கலாமோ என்று துட்டத்துய்மனை நோக்கிக் கேட்க, அவன், எவராயினும் வில்லை வளைக்கலாமென்று கூறினான். உடனே வில் விசயன் வில்லை நோக்கிப் பாய்ந்து சென்றான். மிகவும் இலகுவாக விசயன் வில்லைத் தூக்கி வளைத்து குறிபார்த்து அம்பை விடுத்தான். மறுகணம் சுழலும் இலக்கு அறுந்து கீழே வீழ்ந்தது. அந்தக்கணமே சுயம்வர மாலையை ஏந்தி நின்ற திரௌபதி, மணமாலையை விசயனின் தோளில் சூட்டி மகிழ்ந்தாள்.

56. அங்கவர் விழவே மற்ற அந்தணர் சூழநின்ற
அருச்சுனராகனும் அச்சுதனென்றுண்மையுட
னெழுந்து.

57. பங்கமில்லாத திட்டத்துய்மனை நோக்க நல்ல
பணிவுறு அரசர் அல்லது மறையவர் பண்புடன்
இலக்கறுத்தால்.

58. இலக்கதை வீழ்த்த மாது கலக்கமில்லாமல் சந்து
இன்பமிக நண்பொடு மாலையை இக்கணம் சூட்டு
வாளே.

59. குலக்களிறுரைத்த அரசே காறெனவே விசயனும்
பொய்த் திறமிலையது சத்தியமாகவே கொள்ளு
மென்றான்.

60. சரையது கேட்டுப் பாததன் புருபரையொத்த
வில்லின்
ஒன்றிய நாணதை வெற்றிமிக உன்னதமாய்
ஏற்றி

61. விரைகமழ் மாலை புனையும் வேந்தர்களர
....னோடரின்
விசையொடு சுழலிலக்கது அறிந்திட வேகமுள்ள
அம்புதொட்டான்.

62. தொட்டதை வீழ்த்தமாது திட்டமதுடனே
வந்து
சுந்தரமாலையை இந்திரசுதனது தோளிலே
சூட்டினளே.

63. மட்ட விழ் விசயன் வீமன் வந்தவரை யெல்லாம்
ஓட்டி
வானவர் பூமழை தூவவே தாய்மனை வந்தவர்
தானடைந்தார்.

திரௌபதியைப் பெற்ற விசயன், அவளை அழைத்துக் கொண்டு பெற்றவளிடம் வந்து கனியொன்று கொண்டு வந்தேன் அம்மா என்றான். கனியா ஐவருமாகப் பகிர்ந்து உண்ணுங்கள் என்றவாறு வெளியே வந்து பார்த்தாள். கன்னிப் பெண் ஒருத்தி நிற்பதைக் கண்டு, தவறுதலாகச் சொல்லிவிட்டோமேயென்று வருந்தினாள். அவளது வருத்தத்தைப் போக்கி, உனது சொற்படி நடப்பேன் தாயே என்று உறுதி கொடுத்த விசயன், திரௌபதியைப் பாண்டவர்களுக்கு மனைவி யாக்கினான். கதை புதுத்திருப்பத்தை அடையத் தருவும் மாறுகிறது.

தந்தனத்தோம் தானத்தோம்
தந்தனைத்தோம் தானனே.

இலகுவான தருவைப் பின்பற்றி கதை சுவாரசமாகத் தொடருகிறது.

64. வந்து குந்தி தேவி யுறைந்த
வாய்த்தமனை முற்றமதில்.

65. இந்திர சுதன் கூறலுற்றான் எங்கள்
இன்பமுள்ள மாதாவே,

66. புந்தியதுதான் மகிழ ஒரு
பொற்கனி கொண்டேனெனவே.

67. அந்தமிலா நற்கனியை நீங்கள்
ஐவருமுண்ணு மென்றார்.

68. விந்தையுடனே யுரைத்துப் பின்பு
வெளியில் வந்து பார்ப் புவில்.

69. சுந்தரம் சேர் தோகை தனைக்கண்டு
சோர்ந்துமிகத் தானழுதாள்.

70. அழுதகுந்தி தேவியைத் தேற்றி
அறன்சுதனு மேதுரைப்பான்.

(31 ம் பக்கம் பார்க்க)

# நெற்காணிச் சட்டத்தின் முதலாவது ஆண்டு நிறைவு

மக்கள் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் இயற்றப்பட்ட நெற்காணிச்சட்டத்தின் முதலாவது ஆண்டு விழாவை விவசாய சேவை இலாகாவும் உணவு விவசாய அமைச்சும் மார்ச் மாதம் முதலாவது வாரத்தில் கொண்டாடின.

வாரக்குடியானவனுக்கு வளமிக்க வாழ்வை அளிப்பதற்காக இயற்றப்பட்ட இச்சட்டம் நிலச் சொந்தக்காரரைப் பொறுத்தவரையில் அவர்களுக்குத் திட்டமான வருவாயைத் தொடர்பாக அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டதாகும். மேலும் இச்சட்டம் நாட்டிலுள்ள நீர்ப்பாய்ச்சலுக்கேற்ற சகல பிரதேசங்களையும் நெற்பயிர்ச் செய்கைக்கு உபயோகித்துத் தினசரி அதிகரித்து வரும் எங்கள் நாட்டு ஜனங்களின் உணவுப் பிரச்சினையைச் சமாளிப்பதையும் தனது இலட்சியமாகக் கொண்டுள்ளது.

நெற்காணிச் சட்டம் 1958ம் ஆண்டு மார்ச் 1ந் தேதியன்று கொழும்பு, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் முதன்முதலாக அமுல் நடத்தப்பட்டது. பின்னர் கண்டி, கேகாலை, குருநாகலை, ரத்னபுரி ஆகிய இடங்களில் 1958 செப்டெம்பர் 20ந் தேதியன்று இச்சட்டம் அமுல் நடத்தப்பட்டது. அதாவது இதுவரை 360,000 ஏக்கர் நிலம் நெற்காணிச் சட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும் மொத்தம் 1,014 விவசாய கொமிட்டிகள் இதுவரை நிறுவப்பட்டுள்ளன.

நெற்காணிச்சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் முதலாவது நடவடிக்கை விவசாயக் கொமிட்டிகளை நிறுவுவதேயாகும். இவ்விதம் நியமிக்கப்படும் கொமிட்டிகள் 150 தொடக்கம் 300 ஏக்கர்வரையுள்ள வயல்களைத் தனது அதிகாரத்தின் கீழ் எடுத்துக்கொண்டு செயலாற்றத் தொடங்கும். மேலும் நெற்பயிர்ச் செய்கையை அதிகரிப்பதற்கு விவசாயிகளுக்குப் பலவிதமான வசதிகள் இச்சபைகளால் கூட்டுறவுத் தாபனங்களின் மூலம் செய்து தரப்படுகின்றன. இவ்விதம் அளிக்கப்படும் உதவிகளில் மலிவானவிலையில் பசளைகளை வழங்குதலும், பண உதவி, விவசாய உபகரண உதவி, கடன்தருதல் முதலியனவும் முக்கியமானவையாகும்.

மேலே குறித்த ஆறு டிஸ்திறிக்குகளில் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்கிலுள்ள விவசாயக் கொமிட்டி மேலே குறித்த பல வசதிகளையும் அப்பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்குப் பெற்றுத்தரும் பணியில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

நெற்காணிச்சட்டத்தை அமுல் நடத்தியதன் காரணமாக எஸ். எஸ். ஸி. பரீட்சையில் சித்தி எய்திய 335 மாணவர்களுக்கு இதுவரை உத்தியோகம் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 1,065 வேறு நபர்களுக்கும் விவசாயக் கொமிட்டிகளில் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வெண்ணிக்கை போகப்போக இன்னும் அதிகரித்துவரும்.

இவ்வருட பிற்பகுதியில் நெற்காணிச்சட்டம் காலி, மாத்தறை, களுத்துறை, மட்டக்களப்பு ஆதியாம் பிரதேசங்களில் அமுல் நடத்தப்பட இருக்கிறது. அடுத்த ஐந்துவருட காலத்தில் நெற்காணிச் சட்டம் இலங்கை பூராவும் பரிபூரணமாக அமுல் நடத்தப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நெற்காணிச் சட்டம்

—பிரதமரின் செய்தி

நெற்காணிச் சட்டம் 1958ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாந் தேதியன்று கொழும்பு, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. முதலாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் விடுத்த செய்தி—

### நெற்காணிச் சட்டம் தோற்றுல் சோஷலிஸம் பாதிக்கப்படும்

நெற்காணிச்சட்டம் இப்பொழுது ஓராண்டு காலமாக அமுல் நடத்தப்பட்டுவருகிறது. இலங்கையின் மூன்றில் ஒரு பாகத்தில் தற்போது அமுல்செய்யப்பட்டுவரும் இச்சட்டம் இவ்வருட முடிவில் நாட்டின் பாதிப் பாகத்துக்கு மேல் அமுலுக்கு வந்துவிடும்.

முன்னைய அரசாங்கமும் 1953ல் ஒரு நெற் காணி மசோதாவை நிறைவேற்றியது. ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை. யாருக்கு இச்சட்டம் முக்கியமோ அந்த விவசாயிகளில் மிகப் பெரும்பாலோர்க்கு இவ்வித சட்டமொன்று இயற்றப்பட்டிருக்கிறதென்று கூடத் தெரியாது. ஆனால் இன்று நெற்காணிச்சட்டம், விவசாயிகளின் உரிமைச் சாசனம், எல்லா வீடுகளிலும் முழங்கும் ஒரு வார்த்தையாக மாறிவிட்டது.

இச்சட்டத்தை அமுல் நடத்துவதில் எவ்வளவோ கஷ்டம் இருக்கிறதென்பது உண்மைதான். நாம் இதற்கெனத் தனியான நிர்வாக வசதிகளைச் செய்யவேண்டியிருக்கிறது. விவசாயக் கொமிட்டிகளை வளர்த்து வர வேண்டியுள்ளது. உற்பத்தியை அதிகரிப்பதில் இக் கொமிட்டிகளை நாம் தீவிர சக்திகளாக மாற்றவேண்டியிருக்கிறது. ஆனல் நமக்கு மிகவும் அதிகமாகத் தேவையாயிருப்பது பொது மக்களின் அதிகரித்த ஆதரவாகும். நமது இலட்சியத்தையடைய எல்லோரது ஆதரவும் நமக்குத் தேவை.

நெற்காணிச் சட்டம் பற்றிப் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது நான் கூறிய வசனங்களை இன்று மீண்டும் நினைவுகூர விரும்புகிறேன்.

"எல்லோரது ஒத்துழைப்பும் கூட்டுறவும் தேவையாயிருக்கிறது. ஆனல் மறுக்கமுடியாத சங்கட நிலையில் ஆதரவை அளிப்பதாக அங்கீகரித்துக்கொண்டு பின்னர் சட்டத்தை அமுல் நடத்துகையில் என்னென்ன விக்கினங்களைச் செய்யலாமோ அவ்விக்கினங்கள் யாவற்றையும் புரியும் கொள்கையில் தரப்படும் ஆதரவல்ல நான் கூறும் ஆதரவு. அவ்விதமான மனப்பாங்கு நிலவாதென்று நான் நம்புகிறேன்".

எனது இந்த வார்த்தைகளை நான் இன்றும் மீண்டும் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன். இச்சட்டத்தின் இலட்சியங்களைத் தகர்க்க இன்னும் ஒரு சிலர் முயற்சி செய்துவருகின்றனர். விவசாயிகளை மீண்டும் இருண்ட சகாப்தத்தில் விடுதற்கு அவர்கள் முயலுகிருர்கள். நெற்காணி மசோதாவால் எந்த அரசாங்கம் இதோ விழுந்துவிடும் என்று கூறப்பட்டதோ அந்த அரசாங்கம் இவ்வித எதிர்ப்பை ஒரு போதும் விட்டுக்கொண்டிருக்காது. அவசியமானல் சட்டம் இன்னும் சக்திவாய்ந்த தாக்கப்படும். இந்த அரசாங்கம் மிக முக்கியமான இச் சட்டத்தை தன் சக்தி முழுவதையும் பிரயோகித்து விவசாயிகளுக்கு அதை ஒரு வரப்பிரசாதமாகவும், நெல்லுற்பத்தியை அதிகரிக்கும் ஒரு ஆயுதமாகவும் ஆக்குதற்கு தன்னலான சகல காரியங்களையும் செய்யும் என்பதில் யாரும் ஐயுறவு கொள்ளவேண்டாம். ஏனெனில் இது தோற்ருல் நமது சோஷலிஸ்ட் திட்டத்திற்கு அதனல் மாபெரும் நஷ்டமேற்படும்.

---

# நெற்காணிச் சட்டத்தின் வெற்றி விவசாயிகளிலேயே தங்கியிருக்கிறது

**உணவமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனவின் செய்தி**

நெற்காணிச் சட்டத்தின் முதலாவது ஆண்டு விழாவையொட்டி இலங்கை விவசாயிகளுக்கு விவசாய உணவமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன அவர்கள் விடுத்துள்ள செய்தி :—

1958ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாந் திகதி அரசாங்கம், எனது அமைச்சின் மூலம் ஒரு சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. அதுதான் நெற்காணிச் சட்டமாகும். எங்கள் நாட்டின் ஒரு சிறு பாகத்திலுள்ள சிலர் இந்தச் சட்டத்தை நிறைவேற்றியதற்காக அரசாங்கத்தினையும், எனது அமைச்சினையும், என்னையும் கண்டித்ததை நீங்கள் அறிவீர்கள். இந்தச் சட்டம் இயங்குவதற்கு எதிராகக் கறுவாக்காட்டு "ஏழைக் கமக்காரர்" செய்த ஆர்ப்பாட்டங்களையும் நீங்கள் அறிவீர்கள்.

இந்தச் சீமான்களினதும், சீமாட்டிகளினதும் பிரயத்தனங்களுக்கு மாருக, கடந்த வருடத்தில் நெற்காணிச் சட்டத்தின் முதற் கட்டம் இயங்கத் தொடங்கியுள்ளது என்று கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்னுஞ் செய்து முடிக்கவேண்டியது அதிகமுண்டு. எம்மை எதிர் நோக்கியிருக்கும் முட்டுக்கட்டைகளையும் கறுவாக்காட்டிலுள்ள "எமது நண்பர்களால்" மட்டுமல்லாமல். உதவி புரிபவர்கள் என நாம் எதிர்பார்க்க வேண்டியவர்களும், எம்முடன் பூரணமாக உடன்பட வேண்டியவர்களுமான சிலர் இன்றும் எம்மைத் தாக்கி வருகிருர்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

நெற்காணிச் சட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடத்துவதிலிருந்து எம்மைத் தடுக்க இவர்களாலோ கறுவாக்காட்டிலுள்ள இவர்களின் நண்பர்களாலோ முடியும் என்று நானும் எனது உத்தியோகத்தர்களும் சிறிதும் சந்தேகிக்கவில்லை. இச்சட்டம் ஏற்கெனவே அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் பிரதேசங்களில் பெரும்பாலான கிராமவாசிகளிடமிருந்து எங்களுக்குக் கிடைத்திருக்கும் ஆதரவு, இச்சட்டம் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருப்பது மட்டுமல்லாமல் அது பூர்த்தியடைந்ததும் நாட்டின் தேசிய செல்வத்தை அதிகரிக்கச் செய்யும் என்பதற்குப் போதிய அத்தாட்சியாகும் என நான் கூற முடியும். எமது அரசாங்கம் அங்கீகரித்துள்ள இந்த முக்கியமான சட்டத்தைத் தடைசெய்ய எடுக்கப்படும்

(11 ம் பக்கம் பார்க்க

# உற்பத்திக் குறைவின் காரணம்

ஏழைகளான வாரக் குடிகளினதும், விவசாயிகளினதும் வாழ்க்கை நிலைமைகளை உயர்த்துவதற்கான சமூக சம்பந்தமான சட்டங்கள் விரும்பத்தக்கதாக விருப்பினும் எமது தேசிய அபிவிருத்தியின் இந்தக் கட்டத்தில் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு முதலிடம் கொடுக்கவேண்டியிருப்பதோடு, அக்குறிக்கோளை நோக்கி உற்பத்திக்கான ஒழுங்குகளையும் செய்யவேண்டும். எமது பொருளாதாரம் துருப்பிடித்துக் கிடப்பதும், கிராமப் பிரிவில் எமது முயற்சிகள் பொதுவாக பலனளிக்காமலிருப்பதற்குமான பிரதான காரணங்களை நெற்காணிச் சட்டத்தால் எவ்வளவு தூரத்துக்கு நீக்கிவிட முடிகிறதென்பதைக்கொண்டு மட்டும் இச்சட்டத்தின் பலனைக் கணிக்க முடியும். உற்பத்தி இவ்வாறு அதிகரிக்காமலிருப்பதற்கான பிரதான காரணங்களைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் வகுக்கலாம் :—

(அ) ஊக்கம் அளிக்கப்படாமை.

(ஆ) காணிகளைத் துண்டுகளாகப் பிரித்து பொருளாதார விருத்திக்கு அருகதையற்றவையாக்கியமை.

(இ) போதிய நிர்வாகமும் மேற்பார்வையுமில்லாமை.

(ஈ) கிராமவாசிகளிடையே ஊக்கமின்மை.

(உ) மூலதனமும் கடன் வசதியுமில்லாமை.

அறுவடையில் பெரும்பாகம் காணிச் சொந்தக்காரரால் சுவீகரிக்கப்படும். அல்லது விவசாயியால் காணிக்குச் செய்யப்பட்ட அபிவிருத்திகளெதுவும் அவன் நியாயமற்ற முறையில் வெளியேற்றப்படுவதால் அவனுக்குப் பயனற்றுப் போகும். காணியில் கஷ்டப்பட்டு சம்பாதித்த தனது மூலதனத்தை முதலீடு செய்யவும், அக்காணியில் பாடுபட்டு உழைக்கவும் தற்போதைய சமூக சூழ்நிலையில் விவசாயிக்கு எவ்வித ஊக்கமும் பிறக்காதென்பது தெளிவு. உண்மையில் இப்படிப்பட்ட அபிவிருத்திகள் செய்யப்பட்டால் காணிச் சொந்தக்காரர் அக்காணியைப் பிறிதொரு விவசாயிக்கு ஓர் உயர்ந்த குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விட மேலதிக ஊக்கமளிப்பதாக மட்டுமே அது விளங்கும். இவ்வுண்மைகளைக்கொண்டே வாரக் குடியுரிமை, தொழிலாளருக்கு வழங்கப்படும் யதார்த்தமான ஊக்கம் முதலியனபற்றி நெற்காணிச்சட்டம் ஆராயப்படல் வேண்டும்.

கிடைக்கக்கூடிய புள்ளிவிவரங்களைக்கொண்டு இலங்கையில் நிலவும் பல்வேறு விதமான நெற்பயிர்ச் செய்கைகள் 1955ம் ஆண்டில் இலங்கை பூராவும் கணக்கெடுக்கப்பட்டன. இப்புள்ளி விவரங்களிலிருந்து, இலங்கையில் உள்ள எல்லா நெற்காணிகளிலும் 55 சதவீதமானவை சொந்தக்காரர்களாலேயே, அவர்களின் சொந்த உழைப்பினுல் அல்லது விவசாயத் தொழிலாளர்களைக்கொண்டு பயிர் செய்யப்படுகின்றன என்பதைக் காணமுடிந்தது. எனவே நெற்பயிர்ச் செய்கை சம்பந்தமான நெற்காணிச்சட்டத்தின் ஏற்பாடுகள் எல்லா நெற்காணிகளிலும் குடிவார முறையில், குத்தகையில் அல்லது தட்டுமாறு முறையில் உள்ள எஞ்சிய 45 சதவீதமான நெற்காணிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

---

## நெற்காணிச் சட்டத்தின் வெற்றி........

(10 ம் பக்கத் தொடர்ச்சி)

எந்த முயற்சியும் எனது அமைச்சினுல் மட்டுமல்லாமல் இச்சட்டம் எந்த மக்களின் நலனுக்காகத் தயாரிக்கப்பட்டதோ அம்மக்களாலும் எதிர்க்கப்படுமென எந்தக் குழப்பக்காரரையும் நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். இது கிராமவாசிகளே பேணிப் பாதுகாக்கும் ஓர் சட்டமாகும்.

இச்சட்டத்தின் வெற்றி ஒரு அரசாங்கத்திலோ, ஓர் அமைச்சிலோ, அமைச்சர் ஒருவரிலோ தங்கியிருக்கவில்லை. முடிவில் இதன் வெற்றி எமது கிராமங்களிலுள்ள ஏராளமான மக்களிலேயே தங்கியிருக்கிறது. அது எவ்வளவு தூரத்துக்குத் திறமையாக அமுல் நடாத்தப்படுகிறது என்பது கிராமவாசிகளான உங்களின் முயற்சியையே பொறுத்திருக்கிறது.

எனவே உங்கள் ஆதரவை மட்டுமல்லாமல், எதிர்வரும் மாதங்களில் உங்கள் கிராமத்திலும் இலங்கை பூராவும் நெற்காணிச் சட்டம் அமுல் நடாத்தப்படுவதற்கு உங்கள் மனப்பூர்வ ஒத்துழைப்பை வழங்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

# குடிசைக் கைத்தொழில்

சென்ற பல ஆண்டுகளாக, குடிசைக் கைத்தொழில்களை மிகவும் விருத்தி செய்வதில் எதிரிடும் பிரச்சினைகளை ஆராய்ந்ததில் குடிசைக் கைத்தொழில்கள் பொருளாதார உற்பத்தியின் பொருட்டு வெற்றிகரமாக நிறுவப்படுதற்கு ஒரே வழி தொழிற் சேமிப்பு முறைகளே என்று புலப்படுகின்றது.

இதனை ஆராய்வோம். குடிசைக் கைத்தொழில் முறைகளைச் சமூக சேவையாகக் கருதாது பொருளாதார நிலை பேற்றினைக் கருதின் சில விஷயங்கள் தோன்றுகின்றன :

(1) உள்ளூர் வியாபாரத்தின் குறுக்கம் ஒரு பொருளின் விலையை ஏற்றுவதற்கு உதவி செய்கின்றது.

(2) பலதரப்பட்ட தேவைகள்.

(3) இலங்கை உற்பத்திக்கான உயர்ந்த தரத்திற்குப் பேர்பெற்றதாக இல்லாமை காரணமாக மக்கள் பொதுவாகப் பிற நாட்டுப் பொருள்களையே விரும்புகின்றனர்.

(4) கூடிய உபயோகிப்பாளரையும் திறமையான சக்திகளையும் மிகக் குறைந்த விலையில் தேவையான தாதுப்பொருள்கள் உபகரணப் பொருள்களையும் உடையதாய் மிகக் குறைந்த விலையில் கிட்டத்தட்ட அதே பொருளை உற்பத்தி செய்யும் பெரிய நாடொன்று அண்மையில் இருக்கின்றமை.

இக்கஷ்டங்களை நிவிர்த்தி செய்வதற்கு ஒரே வழி, பொருள் உற்பத்தி முறைகளில் தொழில் சேமிப்பு முறைகளைக் கையாளுதலாகும். உற்பத்தியின் இரண்டு பிரிவுகளிலே தொழில் சேமிப்பு முறைகள் புகுத்தப்படலாம்.

(1) தாதுப் பொருள் உபகரணப் பொருள்களை முடிந்த பொருளாக மாற்றுதல்.

(2) பின்னர் குடிசைக் கைத்தொழிலாளரால் உபயோகப்படுத்துவதற்கெனத் தாதுப் பொருள்களைச் சுருக்க விலையில் தயார் செய்து கிடைக்கக்கூடியதாகச் செய்தல். துரதிர்ஷ்டவசமாக தொழில் சேமிப்பு முறைகளைக் கையாளுதல் என்பது எந்திர சக்தி கிடைக்குமென்பதை உட்கொண்டுள்ளது.

இந்த மாதிரியான நிலைமை இலங்கையில் கைத்தொழிற் பெருக்கத்தினை நோக்கமாகக் கொள்ளும்போது திருப்திகரமானதாயில்லை. எந்திர சக்தி இப்பொழுது சில பிரதான பட்டினங்களிலேயே கிடைக்கின்றது. அங்கும் அது போதியதாயும் குறைந்த செலவிலும் கிடைப்பதில்லை. எனவே இதன் பலன் கிராமப்புறங்களில் வீடுகளிலும் சிறு திட்டங்களிலும் தொழில் சேமிப்பு முறைகளைப் புகுத்துதல் இப்பொழுது முடியாதிருக்கின்றது. கிராமங்களுக்கு மின்சார வசதியளிப்பது பற்றிப் பேச்சுள்ளது. எனினும், இது கைக்கெட்டியதாயில்லை. இம்முறைகளின் நெருக்கம் கிராமப்புறங்களில் உபகரணப் பொருள்களின் உற்பத்தித் தானங்களில் அவசியமாக ஏற்படும். மட்பாண்ட வேலை இதற்கு நல்ல உதாரணமாகும். ஒரு பரந்த களிமண்வயலுக்கு அண்மையில் மின்சார சக்தி கிடைப்பது துர்லபம். இத்தகைய வசதிகள் உள்ள ஆறு நிலையங்களைக் கண்டு பிடிப்பதே இப்பகுதிக்குக் கஷ்டமாயிருந்தது. இதற்குச் செய்யக் கூடிய பரிகாரம் எந்திர சக்தி கிடைக்கக்கூடிய அப்பிரிவிலுள்ள பெரிய கைத்தொழில் நிலையங்களுடனே, சிறு நிலையங்களுடனே குடிசைக் கைத்தொழில் இணைத்து அங்ஙனம் கிராமப்புறக் குடிசைக் கைத்தொழில் வேலையாட்களுக்குத் தேவைப்படும் உபகரணப் பொருள்களைப் பூரணமாகப் பதன்படுத்தப்பட்ட நிலையிலோ, அரைகுறையாகப் பதன்படுத்தப்பட்ட நிலையிலோ கிடைக்கக் கூடியதாகச் செய்தலேயாகும்.

இத்தகைய ஏற்பாடு செய்வதற்கான ஐந்து கைத்தொழில்களை இப்பகுதி தெரிந்தெடுத்தது. அவையாவன : நெசவுவேலை, கயிற்று வேலை, தச்சு வேலை, மட்பாண்டவேலை, பிரம்பு வேலை, பெட்டி இழைத்தல் வேலை ஆகியன. ஆறுவதொன்றும் சேர்க்கப்படலாம். அது, இரும்பு வேலை.

நெசவு வேலையில் இருந்த நிலைமையை நோக்கின், கைத்தறிநிலையங்களுள் எத்தனையோ பல எல்லா நிலையங்களிலும் ஆரம்ப முறைகளையே உற்பத்திக்குக் கையாண்டனவாயிருந்தன என்று தெரிகின்றது. கண்டியில் ஒரு விசைத்தறி நிலையத்தைத் தாபித்ததிலிருந்தும், சிலாபத்தில் இரண்டாவது விசைத்தறி நிலையத்தை நிறுவ ஆரம்பித்ததிலிருந்தும், பலப்பிட்டியாவிலிருந்த தனிப்பட்டவர்க்குச் சொந்தமான ஒரு எந்திரப்பட்டறை ஐக்கிய சங்கமாக மாற்றப்பட்டதிலிருந்தும், வழி முறைகள் மாறி வருகின்றன. ஆரம்ப வேலைகளும் இறுதி வேலைகளும் எந்திரத்தாற் செய்யப்

பட்டும் கைத்தறியால் நெசவு செய்து வருதலுமே இப்பொழுதுள்ள முறையாகும். 1957ம் ஆண்டு முடிவில் கொழும்பு, கண்டி, புத்தளம், குருநாகல், மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டையின் ஒரு பிரிவு ஆகிய முக்கிய உற்பத்திப்பகுதிகளிலுள்ள எல்லாக் கைத்தறிகளையும் இத்திட்டத்தின் கீழ்க்கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்க்கும் .செய்து காட்டுவோர்க்குமான பயிற்சியின் முதற்படிகள் கையாளப்பட்டு இந்த அறிக்கை தயாராகும் சமயத்தில் 400 தறிகள் இத்திட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. இதன் பலனுக ஒன்பது ரூபா முடிந்த சாரம் ஒன்று இப்பொழுது ஆறு ரூபா இருபத்தைந்து சதத்திற்குக் கிடைக்கக்கூடியதாக உள்ளது. உற்பத்திகளையும் பலதரப்படுத்துவதற்கு வழியுண்டு. இதன் நன்மைகள் முன்னையைக் காட்டிலும், தரம், திருப்தியாக உள்ளது. இந்நடவடிக்கை ஓரளவு குழப்பத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டது. அதன் அவசியம் அதனைத் துரிதப்படுத்தியது. இந்தியாவில் வெளியாகும் கைத்தறிவிமர்சனம். ("Hand loom Journal") என்னும் நூல், இக் குறைதான் உற்பத்தியின் விலையைக் குறைத்தற்குச் சாத்தியமான முறை எனத் தொழில் நுட்ப ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று கூறுவதைக் காண ஊக்கம் பிறக்கின்றது. கீழே தரப்படும் பகுதியை நோக்கலாம் —

"உடைக்கு வேண்டிய பொருள்கள் யாவும் கைத்தறிக்கே விடப்பட்டு அத்தொழிலும் தகுந்த வியாபார அடிப்படையில் அமைக்கப்பட வேண்டுமானுல், கைத்தறிகள் இரண்டு பகுதிகளாக, விசை நூற்றல், விசை இணைத்தல், விசை பின்னல், பகுதிகளாக இயங்க வேண்டும். உற்பத்தி நோக்கமாகக் கைத்தொழில் நிறுவப்படுமாயின், கைத்தறித்துணியை விற்பதில் நஷ்ட ஈடு செய்ய வேண்டியதில்லை". இன்னும் கவர்ச்சிகரமான பகுதியொன்று பின்னற் பிரிவைப் பற்றியுள்ளது —"கைத்தறி நெசவாளர் பின்னல் அறிவு குறைந்தவர்களல்லர். குடிசைப் பின்னற்காரருக்கு, கைத்தறி ஒரு மிகச் சிறந்த கருவியாகும். தானுய் இயங்கும் விலை கூடிய, கையாலோ, காலாலோ அல்லது மின்சாரத்தினுலோ இயக்கப்படும் விசைத்தறியை அதற்காக வைப்பது புத்திசாலித்தனமாகாது. அதற்கு மூலதனமாகச் செலவிடப்படும் தொகை கைத்தறி சம்பந்தப்பட்டவரை கைத்தொழிலுக்குதவி செய்யவும் மாட்டாது; பின்னற்காரர் குறைந்த தொழிலுடையோராய் இருப்பதையும் மாற்றமாட்டாது. அனுபவத்தால் அறியப்பட்டபடி ஒரு காலால் இயக்கப்படும் தானுய் இயங்கும் தறிக்குப் பதிலாகப் பத்து குளித் தறிகளைத் தாபித்தால். பின்னையது முன்னையதிலும் பார்க்கக் கூடிய துணிகளை உண்டாக்குவதோடு அதிக மானேர்க்கு வேலையுமளிக்கும்.

இது விசைத்தறிகளுக்கும் பொருந்தும். கைத்தறிப் பின்னலை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைக்குப் பரிகாரம் நீண்ட அளவான நீள நூல்களை, மரத்தடி உருளைகளிலும், குறுக்கு நூல்களை, கடதாசிக் குழாய்களிலும் ஏற்றவாறு சுற்றி, கைத்தறிகளில் அவை உடனே உபயோகிக்கக்கூடியவாறு நூல் ஆலைகளை தயார் செய்து, பின்னல் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுப்பதாகும். நீள நூல், குறுக்கு நூல் தயாரிப்பதில் பலனில்லாது காலத்தைச் செலவிடும் பின்னல் வேலைக்காரர் குடும்பம் பின்னல் வேலையில் மட்டும் கவனம் செலுத்திக் குடும்ப வருவாயைப் பெருக்கலாம்".

எங்களால் ஏற்கெனவே கருதப்பட்டு நடைமுறையிற் கொண்டுவரப்பட்ட இத்தகைய கொள்கைக்கு ஆதரவு கிடைப்பது ஊக்கமளிப்பதாகும். அதுவும் வருடத்திற்கு 1,500,000,000 யார்களை உற்பத்தி செய்யும் கைத்தறிப் பின்னல் தாபனத்தை உள்ளடக்கியது அகில இந்திய கைத்தறிச் சங்கம் என்பதை எண்ணும் பொழுது ஊக்கம் பிறக்கின்றது. எங்ஙனமேனும் இவ் வழியில் எங்கள் ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

கயிற்றுத் தும்பு வேலை இதிலிருந்து சிறித் வித்தியாசமான சிக்கல்களை காண்பிக்கின்றது. இவ் விஷயத்தில் உபகரணப் பொருள்கள் பெரும்பாலும் குடிசைக் கைத்தொழில் அடிப்படையிலேயே தயார் செய்யப்படுகின்றன. கையாளப்பட்ட முறை முதற்படியாக நூலை உபயோகப்படுத்திக்கொள்ள எந்திர சாதனத்தொடு கூடிய வேலைத்தலங்களை நிறுவுதலேயாகும். எந்திர சாதனம் நிறைந்த இரு வேலைத் தலங்களும் முற்றுவிக்கும் எந்திரமொன்றும் 1958 ஆம் ஆண்டில் நிறுவப்படுகின்றன. இதனை அடுத்த ஆண்டில் நாலால் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் விசைத்தறித் தும்பு நிலையமொன்றினைத் தாபிப்பதற்குத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இதற்கு மேலும் இரண்டு வருஷங்கள் செல்லும். இதற்கிடையே, அடித்தல் இணைத்தல் நுட்பங்கள் பற்றியும் ஆராய்ச்சி நடைபெறுகின்றன. ஆராய்ச்சிகளினுல் இதுவரை பெற்ற பலன்கள் மிக ஊக்கம் தருவனவாயுள்ளன. எந்திரங்கள் உருவாக்கப்பட்டு நுண்மையான மாற்றங்கள் இப்பொழுது முற்றுவிக்கப்படுகின்றன. இம்முறையில் பெருமளவாகத் தும்புப்படிகை செய்தல் முறையையும் ஒழுகலாற்றையும் மாற்றவே செய்யும். இயந்திர சாதனத்தின் பேருகக் குடிசைக் கைத்தொழில் அள்வில் தும்பு

உற்பத்தி செய்வோரதும், பின்னுவோரதும் நிலைமை முன்னேற்றம் அடைவதோடு இயற்கையாகப் பிரதிபலிக்கும், கூடிய வருமானத்தையும் கொடுக்கும். கையாளப்படும் முறைகள் பக்குவப்படாதவையானதுமாகும். உலக தரத்துடன் சரி சமனான தரத்தையுடையதாக இருக்கும் ஒரு இலங்கைக் கைத்தொழில், இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. இதன் குறைபாடுகளிலும் விலையேற்றப்படுதலினால் ஆகும் குறைபாடு இதிலுள்ள சிக்கல் குடிசைக் கைத்தொழில் அமைப்பில் திருத்தி அமைத்து, உற்பத்தியைப் பெருக்கி, தொழிலால் வரும் முழுப் பலனையும் தொழிலாளரே பெற வழி செய்வதாகும்.

மட்பாண்டத்தின் விஷயம் இன்னும் சிறிது கடினமானது. இத்தேசத்தில் உண்டாக்கப்படும் பெரும்பாலான மட்பாண்டங்கள் பண்டைக்காலந்தொட்டு வீட்டுத் தேவைக்கான சட்டி பானைகளேயாகும். இவற்றின் உற்பத்தியிற் கையாளப்படும் நுட்பங்கள் வேறு யாண்டும் உள்ளவைபோற் சிறந்தனவே. உதாரணமாக இத்தகைய மட்பாண்டங்கள் உபயோகிக்கப்படுமிடமாகிய இந்தியாவில் இவற்றிற்கு மாற்றான அலுமினியம் கிடைப்பதன் காரணமாக, இவற்றைச் சந்தைப்படுத்தும் வசதிகள் அருகி வருகின்றன. தொழில் நுட்ப முறையில் இத்தகைய உற்பத்திகளுக்குப் பாரம்பரிய கைத்தொழிலாளர்க்கு இப்பகுதி படிப்பிக்கக்கூடியதொன்றுமில்லை. செய்யக்கூடியதொன்று, கூடிய சந்தைப்படுத்தும் வசதிகளுக்கும் தேவையான மூலப் பொருள்களை சுலபமாகப் பெற்றுக்கொள்வதற்குமாக இவர்களுக்கு கூட்டுறவு சங்கங்களை ஆக்குதலேயாகும். இத்தொழிலை விருத்தி செய்வது அழுத்தமான பொருள்களில் பரீட்சார்த்தங்களையும் அதற்காக எந்திரப்படுத்தலையும் கொண்டுள்ளது. பாகப்படுத்தாத முறைகள் தரம் மிக்க பொருள்களைத் தோற்றுவிக்கா என்பதே பெறப்படுவதாகும். திறமான பொருட்களை உற்பத்தி செய்வதற்கு எந்திர சாதனம் அவசியமாகும். ஏனெனில், அழுத்தப்படுதலும், கலவை கலத்தலும் தக்க சூளையிடுதலும் இதற்குத் தேவையாகும். துரதிர்ஷ்டவசமாய் முன்னே குறிப்பிட்டது போல இத்தகைய வேலைகளுக்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகிய மின்சாரம் உள்ள அநேக இடங்களில், கைத்தொழில்கள், பாரம்பரியம் காணப்படுதல் இல்லை. இதன் பேறு இத்தகைய வசதிகளுடைய நிலையங்களைத் தெரிந்து கொள்ளுதலாம். அவையும் சில தூரத்திலுள்ளன. தீவு முழுமையுமே ஆராய்ந்ததில் இவ்விரண்டு வசதிகளுமுடைய ஆறு நிலையங்களே தகுந்தனவாகக் காணப்பட்டுள்ளன. இங்கு தளபாடங்கள் நிறுவப்பட்டு மின்சாரச் சூளை முதலியன அமைக்கப்படுகின்றன. இந்நிலையங்கள் இரண்டாந்தர மூலப் பொருள்களைப் பெருந்தொகையில் எந்திர சக்தி இல்லாமலும் அத்தகைய உபகரணங்கள் வைக்கப்பட முடியாத நிலையங்களுக்கு விநியோகிப்பதற்கெனத் தயார் செய்யும். தெரியப்பட்ட நிலையங்களாவன: நித்தம்புவை, வெலிகம, அம்பலாங்கொடை, அம்பமுல்ல, வறகொட, டெடியாவலவுமாகும். வேறு இடங்களிலே மேலும் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. அண்மையில் உண்டான அபிவிருத்தி ஒன்று, பீங்கான் தரத்திற்கு எட்டிய களிமண் சில பகுதிகளில் காணப்படாமையும், குடிசைக் கைத்தொழில் அளவில் அவற்றைப் பதன்படுத்தலும் ஆகும். இப்பரீட்சைகள் வெற்றி பெறுமாயின் சிறந்த பீங்கான் தரம் தேவையற்ற இறக்குமதி செய்யப்படும் எத்தனையோ பொருள்களுக்குப் பதிலாக, அத்தகைய பொருள்களை இலங்கையிலேயே உற்பத்தி செய்ய வாய்ப்பளிக்கும். அத்தகைய பொருள்களாவன: சுகாதாரப் பொருள்களும் அமைப்புகளும், மின்சார உபகரணங்களும் ஏனையவும் ஆகியன. எக்கைத்தொழிலும் வளர்ச்சியைத் தனியே சித்திரப் பொருள்களில் மட்டும், பொறுத்திருக்க முடியாது. எனவே, இதனை எய்துதற்கு இவ்வழிகளில் ஆராய்ச்சிகள் செய்யப்படலாயின. இலங்கையில் நடுத்தர, கீழ்த்தர வகுப்பினர்க்கு மிகவும் தேவைப்படுவதான குறைந்த ரக, குறைந்த விலை பீங்கான் வீட்டுப் பொருள்களையும் உற்பத்தி செய்ய முடியும்.


பிரம்பு வேலையும், பெட்டி இழைத்தல் வேலையும் பாரம்பரிய தொழில்கள் தான். ஆனால் கையாளப்படும் முறைகளும் உற்பத்தியும் முரடானவை, ஆதலால், விலை ஏற்றங்கள் வசதியற்றவை. இங்கும் இக்கைத்தொழில் வாழவேண்டுமாயின் குறைந்த விலை மூலப் பொருள்கள் பயன்படுத்தப்பட வேண்டும். இத்தகைய அரைவாசியளவு இயந்திர சாதனமுடைய நிலையமொன்று, யப்பானிய அரசாங்கத்தின் தொழில் நுட்ப ஆட்களோடும் உபகரண உதவிகளோடும், கண்டி, மாவில்மடவில் இவ்வாண்டில் திறக்கப்பட உள்ளது. இந்நிலையத்தில் மூங்கில் வேலை, பிரம்பு வேலை ஆகியவற்றைச் செய்வதுடன், அத்தொழிலாலையில் குடிசைக் கைத்தொழிலாளர்க்குத் தேவைப்படும் பாகப்படாத பொருள்களையும் உற்பத்தி செய்யக் கருதப்பட்டுள்ளது. ஒரு உதாரணம், கதிரை பின்னத் தேவைப்படும் வெளிப்பிரம்பாகும். இப்பொழுது அதனைத் துப்புரவாக்குதலும், பிளத்தலும், பெரும் தொழிற் செலவில் நடைபெறுவதால் கூடிய விலையிற் செய்யப்படுகிறது. தளபாட உற்பத்தியைத் தவிர ஏனைய பின்னல், குடிசைக் கைத்தொழிலாகவேயுள்ளன. அரைவாசி பாகப்படுத்தப்பட்ட மூலப் பொருள்களின் உற்பத்தியின் அதிக விலை அதனைச் சிக்கனமற்ற தொழிலாகச் செய்கின்றது. மாவல்மடையில் தாபிக்கப்படும் நிலையத்திலிருந்து

பெருந் தொகையில் குடிசைக் கைத்தொழிலாளர்க்கு உதவி அவர்களுக்குக் கூடிய வருமானத்தை உண்டு படுத்தக் கருதியுள்ளது.

தச்சு வேலை நுட்பமான அதிக வரும்படியுள்ள தொழிலாக்கப்பட வேண்டுமாயின் பழங்கால முறைகள் மாற்றப்பட வேண்டும். அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் கொழும்புத் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தச்சுவேலை நிபுணர், திரு. ஹியாவ்றின் ஆலோசனையோடு கிராமப்புற வாலிபர்களுக்குப் பயிற்சியளிக்க முப்பது அர்த்த யந்திர சாதனப் பயிற்சிப் பாடசாலைகளையும், மொறட்டுவ, வெலோனாவில், பூரண எந்திர சாதனமுள்ள ஒரு நிலையத்தையும், இவ்வாண்டில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. சிறிய அளவு உபகரணங்கள் இப்பாடசாலைகளுக்கு ஏற்கெனப் பெறப்பட்டுவிட்டன. செய்துகாட்டுமுத்தியோகத்தரும் இவற்றின் உபயோகத்தில் பயிற்றப்பட்டுள்ளார்கள். கொழும்புத்திட்ட உதவியின் கீழ் அவுஸ்திரேலிய அரசாங்கம் பாடசாலைகளுக்கு நிறுவுவதற்கென இருபத்தைந்து அர்த்த எந்திர உபகரணங்களை வழங்கியுள்ளது. ஐந்து நிலையங்கள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மின்சாரம் கிடைக்கக்கூடிய இடங்களில், தீவிலுள்ள தச்சு வேலைச் சங்கங்கள் அர்த்த எந்திர சாதனங்களுள்ள பாடசாலைகளிலுள்ள உபகரண அமைப்பில், சிறிய, பெரிய உபகரணங்களையும், பாரிய வேலைகளுக்கு வெலோனாவில் நிறுவப்பட்டிருக்கும் பெரிய தச்சு வேலை நிலையத்தில் உள்ளவை போன்ற உபகரணங்களையும் பெற்றுக் கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தொழிற் சேமிப்பு முறைகளைக் கையாண்டு உற்பத்தியின் செலவைக் குறைத்து உற்பத்திச் செலவின 25 விகிதம் குறைத்து, கைத்தொழிலின் சம்பளத்தைக் கூட்ட இது வழிவகுக்கும். இந்த நிலையங்களும், உற்பத்தி நிலையங்களும், பயிற்சி நிலையங்களுமாய் 25 இலட்சம் ரூபா பெறுமதியுள்ள திறமான பொருள்களை, இப்போது கிடைப்பதிலும் பார்க்க அதிகம் குறைந்த விலையில் உண்டுபண்ணும் சக்தி வாய்ந்தன. அவைகள் தங்கள் செலவைத் தாங்களே பொறுக்க வேண்டும். அதிக முன்னேற்றம் செய்யப்படும் கைத்தொழில்களுள் இது ஒன்றாகும்.

இங்ஙனமாகக் கையாளப்படுதற்குரிய மற்றொன்று, கம்மாளர் தொழில். இத்தொழிலுக்குக் கிடைத்துள்ள வாய்ப்புகளுள் ஒன்று, அதற்குத் தேவைப்படும் மூலப்பொருள்களாவன, புகையிரதத்தின் “ஸ்பிறிங்” உருக்கிரும்பு; இது ஏராளமாகக் கிடைக்கக்கூடியதாயிருக்க வேண்டும். விவசாய உபகரணங்களாகிய கத்தி, கப்பாத்து வெட்டும் கத்திகள், அடுப்படிக் கத்திகள், கிண்டு, முள்ளுகள், அலவாங்கு, மண்வெட்டி ஆதியன செய்யக்கூடியதான இவ்வுருக்கிரும்பு, தாராளமாகக் கிடைக்கக்கூடியது. எனினும் அதன் விலையை தொன் ஒன்றுக்கு 95 ரூபாவிலிருந்து 212 ரூபாவாகப் புகைவண்டி அலுவற் பகுதி உயர்த்தியது வருந்தத்தக்கது. இத்தகைய மூலப்பொருள்கள், புகைவண்டி அலுவற் பகுதியாருக்கு உபயோகமின்மையாலும், அவை வெளியிட விடப்படின் வெளியூருக்கு ஏற்றப்பட்டுவிடக் கூடுமாதலாலும் அவை முழுவதும் குடிசைக் கைத்தொழில் தேவைக்காக மட்டுமே உபயோகப்படுத்தப்படவேண்டுமென்பது தகுந்ததாகக் காணப்படுகிறது. இப்பொழுதும் கிராமக் கம்மாளராலும், கம்மாளர் சங்கங்களாலும், உண்டாக்கப்படும், விவசாய உபகரணங்கள் இறக்குமதி செய்யப்படுவனவற்றின் தரத்தைக் கிட்டத்தட்ட உடையன. அவர்களெல்லோரும் அரசாங்க பாதுகாப்புப் பெற்ற, கொள்வனவுத் திட்டத்தின் மூலமல்லாது, தங்களுக்கான வியாபார ஸ்தலங்கள் மூலமே தொழிலாற்றுகிறார்கள். இத்தகைய பொருட்களின் இறக்குமதியை நிறுத்துவதற்குக் காலம் வந்துவிட்டதெனக் கருதுகிறேன். இத்தகைய உபகரணங்கள் உபயோகிப்பவரை அத்தகைய இறக்குமதி நிறுத்தம் பாதிக்காதிருப்பதற்கு தொடக்கத்தில் கையிருப்பைப் பெருக்கிக் கொள்ளல் தவிர்க்க முடியாதது. எனவே அரசாங்க மூலதனத்திற்கு, செலவு என்றபோதும் அதன் பேறுகள் அவற்றிற்கு ஈடு செய்வன. உற்பத்திச் செலவினைக் குறைப்பதற்கு ஒரு இலகுவானவழி, சலிலசாலன அமுக்கு கருவி ஒன்றை, அதுவும் புகைவண்டியலுவற் பகுதியினாலேயே நிறுவுதலாம். இதனால் உள்ள உருவத்தில், ஸ்பிறிங் உருக்கிரும்பைக் கொடுக்காது சில தரப்படுத்தப்பட்ட அளவைகளில் அவற்றைக் கிடைக்கச் செய்யலாம். இன்று அதிகம் செலவைக் கொடுப்பதாக இருக்கின்ற இரும்பை மெல்லியதாய்ப் பரப்புதற்குரிய தொழிற் செலவு குறைக்கப்படும். இவ்விஷயம் புகைவண்டியலுவற்பகுதியோடு கவனிக்கப்பட்டு வருகிறது. ஒரு தொழிலின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவை எங்கெல்லாமிருந்ததோ, அங்கவற்றைப் பெரிய எந்திர சாதன உற்பத்தி நிலையங்களோடு இணைக்க வேண்டுவது அவசியம் ஆயிற்று. இவ்விதத் திட்டம் முன்னே தரப்பட்ட காரணத்துக்காகத் தவிர்க்க முடியாததாகும். இம்முறையிலேயே குடிசைக் கைத்தொழில்கள் சிக்கன முறையில் ஸ்திரப்படுத்தப்படலாம்.

(கிராமாபிவிருத்தி—குடிசைக் கைத்தொழில் அதிபதியின் 1957ம் ஆண்டு நிர்வாக அறிக்கையிலிருந்து அனுமதிக்கப்பட்டது.



வித்யோதய பல்கலைக் கழகத் திறப்பு விழாவில் பிரதமர் சொற்பொழிவாற்றுகிறார்.

# வித்யோதய பல்கலைக் கழகம்

பெப்ருவரி மாதம் 18 ந் தேதி இலங்கையின் கல்வித் துறையில் ஒரு முக்கிய தினம். அன்றுதான் வித்யோதய பிரிவேனை பல்கலைக் கழக அந்தஸ்துக்கு உயர்த்தப் பட்டது. அதியுத்தம கவர்ணர் ஜெனரல் சேர். ஒலிவர் குணத்திலகா அவர்கள் பல்கலைக் கழகத்தை அங்குரார்ப்பணஞ் செய்து வைத்துப் பேசுகையில், "இது சரித்திர முக்கியத்வம் வாய்ந்த சம்பவமாகும். பிரிவேனைக் கல்வித்துறையில் இன்று தொடக்கம் மறு மலர்ச்சி ஆரம்பமாகிறது. வித்யோதய பல்கலைக் கழக அங்குரார்ப்பண விழாவில் கலந்துகொள்ளக் கூடியதாக விருந்தது என் பாக்கியம். இலங்கையிலுள்ள இரு பிரதான பிரவேனைகளுக்கும் பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கியது கல்வித்துறையில் அரசாங்கம் ஈட்டியுள்ள சிறந்த சாதனையாகும். கல்வி மந்திரி தகநாயக்கா அவர்கள் கீழ்த்திசைக் கலைக்கும் கீழ்த்திசைக் கலைத் தாபனங்களுக்கு நவ இலங்கையில் ஊக்கமும் ஆக்கமும் அளித்தவர் என்ற முறையில் இலங்கைச் சரித்திரத்தில் என்றென்றும் போற்றப்படுவார்." என்று குறிப் பிட்டார்.


இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க பேசுகையில் "இன்றைய சம்பவம் சரித்திரச் சிறப்புவாய்ந்ததொன்றாகும். இத்தகைய அரும் பெரும் சம்பவங்கள் இலங்கை சுதந்திரம் பெற்றதன் பெறு பேருக ஏற்பட்டனவாகும். சுதந்திர

நாட்டிலேதான் இத்தகைய வைபவங்களைக் காண முடியும். இக்காலத் தேவைக்கேற்ப, பிரிவேனைகள் புதுமையையும் பழமையையும் ஒருமுகப்படுத்திப் பேணும் நிலையங்களாக விளங்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

கல்வி மந்திரி திரு. தகநாயக்க அவர்கள் பேசுகை யில், கடந்த 150 ஆண்டுகளில் இலங்கையில் உதித்த ஐந்து பெரியார்களுள் ஒருவராக மதிக்கப்படும் வண. ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல மகா தேரர் அவர்களே பிரிவேனைக் கல்விக்கு வித்திட்டவராவர். வித்யோதய பல்கலைக் கழகம் சிறந்த முறையில் தொண்டாற்றும் என எதிர்பார்க்கிறேன். அது செய்யவேண்டிய முக்கிய கடமையொன்றுண்டு. அடுத்த இரண்டாயிரம் ஆண்டு கட்கு பௌத்த மதத்தைப் பேணும் பொறுப்பு அதற்குண்டு. அது இந்நாட்டு மக்களின் கலாசாரத்தை யும் மொழியையும் பாதுகாப்பதுடன், பிற மதங்களை மதித்தும் நடக்கவேண்டும்" என்று குறிப்பிட்டார்கள்.

வித்யோத பல்கலைக்கழக அங்குரார்ப்பண விழா ரொறிங்ரன் சதுக்கத்திலுள்ள சுதந்திர ஞாபகார்த் மண்டபத்தில் பல அறிஞர்கள், பௌத்த குருமா முன்னிலையில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ்வைபவத்தின்போது சேர். ஒலிவர் குணத்திலக்க அவர்கள் உப வேந்தர் வண. சோரத மகாநாயக தேரரிடம் உத்தியோக அதிகார சின்னமாகிய "வட்டாபத்" என்னும் விசிறியை ஒப்படைத்தார். பல்கலைக்கழகத்தின் முத்திரையையும் விசேட தரிசகர் புத்தகத்தையும் பல்கலைக்கழகப் பதிவாளரிடம் ஒப் படைத்தார்.

வித்யோதய பல்கலைக் கழகத் திறப்பு விழாவில் கல்வியமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார்.



# குடித்தனமும் இரசாயனமும்

விஞ்ஞான அறிவு வளர்ச்சியின் பயன் என்ன? பரம் பொருளைப் பற்றிச் சிந்திப்பதற்கும் அதைக் காண முயல்வதற்கும் விஞ்ஞான அறிவு வழிகாட்டும், அல்லது வாழ்க்கையிலே இன்ப துன்பங்களைச் சமமாகப் பாவித்து எதனுலும் கலங்காத மன நிலையை அடைவ தற்கு அவ்வறிவு துணை செய்யும் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். பொதுவாக, மனிதன் சுகமாக வாழ்க்கை நடத்த உதவவதே இந்த அறிவு வளர்ச்சியின் நோக்கம். இரசாயனமானது இப்படி மனிதனுடைய அன்ருட வாழ்க்கையிலுள்ள சிரமத்தைக் குறைக்க ஏதாவது உதவி யிருக்கிறதா என்பதை இங்கே சிறிது பார்க்க லாம்.

காலையிலே காப்பி போடுவதற்காக அடுப்பைப் பற்ற வைப்பது முதல், இரவிலே முதல் யாமம் கழிந்தபின் விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கப் போவது வரை யில் இரசாயனமே மனிதன் வாழ்க்கைக்கு உதவி வரு கிறது என்ருல், சற்று வியப்பாகவே தோன்றும். ஆனல் இது உண்மை. எப்படி?

காலையில் அடுப்புப் பற்ற வைப்பதென்ருல், அதற்கு வேண்டிய நெருப்பு எங்கிருந்து கிடைக்கிறது? இரவில் அணைக்கிற விளக்கை முதலில் ஏற்றியபோது நெருப்பு எங்கிருந்து கிடைத்தது? பழங்காலத்திலே சிக்கிமுக் கிக் கற்களை வைத்துக்கொண்டு, அவற்றை ஒன்ருே டொன்று உராய்ந்து, அப்போது பிறந்த நெருப்புப் பொறியைப் பஞ்சிலோ உரிமட்டையிலோ ஏந்தி மக்கள் நெருப்புண்டாக்கிக் கொண்டார்கள் என்று நாம் படித் திருக்கிருேம். எல்லா நாடுகளிலுமே இப்படித்தான் நடந்து வந்திருக்கிறது.

நம்முடைய நாட்டிலே, வேறு வகையில் தீயை வளர்த்து வந்திருக்கிருேம். எல்லாப் பொருள்களையும் புடமிட்டு அழுக்கைப் போக்கித் தூய தன்மையை அளிப்பவன் அக்கினி தேவனல்லவா? கலியாணம் உள் ளிட்ட நமது சடங்குகள் யாவும் அக்கினி சாட்சியாக வே நடைபெறுகின்றன. நடராஜாவே கையில் தீயை ஏந்தி ஆடுகிருரென்ருல், பிறகு அத்தீயின் பெருமை யைக் கேட்பானேன்? பிராமணருக்குரிய முக்கியமான தொழில்களுள் ஒன்று, தீயை ஓம்புவது. தீயை வளர்த்து, அது அவிந்து போகாமல் காத்து அனைவ ருக்கும் உதவுவது எவ்வளவு உபயோகமான செயல்? பண்டைய கிரேக்க நாட்டிலுங்கூட கோயிலில் தீ அணைந்து போகாமல் காத்துவருவதற்குக் கன்னிப் பெண்கள் எழுவர் நியமிக்கப் பெற்றிருந்தார்கள் என்று அறிகிருேம்.

## தீப்பெட்டி

ஆனல், எங்குமே இன்று தீயை ஓம்பி வரும் பழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. தீக்கு உபயோகமோ, மிக அதிகமாய்ப் பெருகியிருக்கிறது. ஆலய வழிபாட்டு முறைகள் சமையல் வேலை முதலியன மட்டுமல்ல; வீட்டிலும், வெளியிலும், ரயிலிலும், பஸ்ஸிலும் கப்பலி லும், நினைத்தவுடன் நெருப்பு வேண்டியிருக்கிறது. சந்தர்ப்பங்கள் இப்போது எத்தனையோ மடங்கு பெருகிவிட்டன. ஒவ்வொரு தடவையும் சிக்கிமுக்கிக் கற்களைத் தேடிப் போக முடியாது; அன்றி அவைகளை மடியில் கட்டிக் கொண்டு போகவும் முடியாது. இந்த அவசியத்தை முன்னிட்டு ஏற்பட்டதுதான் தீப்பெட்டி.

இன்று, ஒரு குச்சியை எடுத்துப் பெட்டியின் ஓரத் தில் கிழித்தவுடனே பற்றிக்கொள்கிறது. ஆனல் முதல் முதல் தீப்பெட்டி செய்தபோது இவ்வளவு சௌகரியமா யில்லை. சுமார் 1800 ஆம் ஆண்டில் தான் தீக்குச்சிகள் செய்யப் பெற்றன. மெல்லிய மரக் குச்சிகளைத் தயா ரித்து, அவற்றின் நுனியில் வெடியுப்பும் (பொடாஸியம் குளோரேட் உப்பு) சர்க்கரையும் பிசினும் கலந்து தோய்த்து வைத்ததே தீக்குச்சி. காரமான கந்தகத் திராவகத்தில் இது பட்டவுடனே தீப்பிடித்துக் கொள் ளும். ஆகவே, குச்சியோடு கூட, கந்தகத் திராவகமும் பையில் வைத்திருப்பது அக்காலத்தில் அவசியமா யிருந்தது; இந்தத் திராவகத்தில் நனைத்த கல் நாரை (ஆஸ்பெஸ்டாஸ்) ஒரு சிறிய கண்ணுடிப் புட்டியில் போட்டுக் கூடவே கொண்டு செல்வார்கள். இப்புட்டி யும் குச்சியும் சேர்ந்தால்தான் தீப்பெட்டி.

பிறகு மற்ருெரு வகையான தீக்குச்சிகள் வந்தன. உப்புத்தாளை மடித்து அந்த மடிப்பின் இடையில், கலவை மருந்தில் தோய்த்த குச்சியின் முனையைப் பிடித்து இழுத்தவுடன், அக்குச்சி பற்றிக்கொள்ளும். இம்முறை கொஞ்ச நாள் உபயோகத்திலிருந்தது.

இன்றைய நெருப்புப் பெட்டியில் தீப் பிடிக்கக் காரண மாயிருப்பது, பாஸ்பரஸ். ஆனல், மேற்சொன்ன இரு வகைகளிலும் பாஸ்பரஸ் கையாளப் பெறவில்லை.

பாஸ்பரஸ் என்பது ஒரு தனியான பொருள் என்று 1674 இல் ஒரு ஜெர்மானிய டாக்டர் கண்டுபிடித்தார். அதை உற்பத்திசெய்யும் முறை எளிதல்ல. நூறு ஆண்டு களுக்குப் பிறகுதான், எலும்புத் தூளிலிருந்து அதைச் செய்யும் முறை தெரியவந்தது. பாஸ்பரஸில் சிவப்பு, மஞ்சள் (அல்லது வெள்ளை) என இருவகை, மஞ்சள் வகை, மெழுகுபோலிருக்கும்; விஷமுடையது; காற் றில் வெகு சீக்கிரம் தானே எரிந்து போகும். ஆனல், சிவப்பு வகை. இவ்வளவு விஷமுடையதல்ல; இது

தூளாயிருக்கும்; மெதுவாகத்தான் எரியத் தொடங்கும். மஞ்சள் வகையைக் காற்றுப் படாமல் இருப்புப் பாத்திரத்திலிட்டு ஸெண்டிகிரேட் 230 டிகிரி வரை காய்ச்சினுல் சிவப்பு வகை உண்டாகிறது.

மின்சாரத்தின் துணையால் இன்று எலும்புத் தூளிலிருந்து பாஸ்பரஸ் செய்கிருர்கள். எலும்புத் தூளையும் மணலையும் கரித் தூளையும் கலந்து அதில் மிக அதிகமான சூடு உடைய மின்சாரத்தைப் பாய்ச்சிக் காய்ச்சுகிருர்கள். மணலின் துணையால் எலும்பிலிருந்து பாஸ்பாரிக் ஆக்ஸைட் வெளிப்படுகிறது. இதிலுள்ள ஆக்ஸிஜன் (பிராணவாயு) கரியுடன் சேர்ந்து கார்பன் மானுக்ஸைடு என்ற வாயுவாகவும் பாஸ்பரஸ் மட்டும் தனி ஆவியாகவும் வெளிப்படுகின்றன. இவற்றை நீரினுட் செலுத்தி பாஸ்பரஸ் ஆவியை இறுகச் செய்து மஞ்சள் பாஸ்பரஸ் எடுக்கிருர்கள். இதையே பின்னர் சிவப்பு வகையாக மாற்றி, தீப்பெட்டித் தொழிலுக்கு உபயோகிக்கிருர்கள்.

### தீக்குச்சி

நாம் இப்போது உபயோகித்து வரும் தீக்குச்சிகள் அபாயமில்லாதவை (ஸேப்டி) என்று சொல்லப்படுபவை. அபாயமான வகையொன்று முன்னமே இருந்தது. இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்னமே ஸ்வீடன் தேசத்திலிருந்து ஒருவகைக் குச்சிகள் வந்தன. அவற்றின் நுனியில் தோய்த்துள்ள மருந்தில், வெடிப்பு முதலியவற்ருேடு கூட, சிவப்பு பாஸ்பரஸுைம் கொஞ்சம் கலந்திருந்தது. இந்த முனையைக் கரடுமுரடான கல்லின் மீதோ, சுவர் அல்லது மரத்தின் மீதோ, தேய்த்தவுடன் பற்றிக்கொள்ளும். சில சமயம் இப்படித் தேய்க்காமலே, மடியிலும், பையிலும், தலைமாட்டின் தலையணைக்கடியிலிருந்து இவை தாமாகவே உராய்ந்து பற்றிக்கொள்ளுவதுமுண்டு. இப்படியாக இவை பெரிதும் அபாயத்துக் கிடமாயிருந்தன.

இன்றைய தீக்குச்சிகள் சிறிது மாறுபட்டவை. குச்சி முனையிலேயே பாஸ்பரஸ் இருப்பதற்குப் பதிலாக, பெட்டியின் பக்கத்தில் தடவப்பட்டிருக்கிறது. குச்சியை இதன்மீது தேய்த்தால், இதிலுள்ள பாஸ்பரஸ் காரணமாய்ப் பற்றிக்கொள்ளுகிறது. இக்குச்சியை வேறிடத்தில் தேய்த்தால், பாஸ்பரஸ் இல்லாமையால், பற்ருது; தானுக உராய்ந்தும் பற்றிக் கொள்ளாது. எனவே அபாயமும் இல்லை.

பாஸ்பரஸ் விஷமுள்ளதாகையால், குச்சி எரியும் போது உண்டான காற்று சில நோய்களுக்குக் காரணமாயிருந்தது. அதனுல், பின்னுல் செய்த குச்சிகளில், பாஸ்பரஸை நீக்கிவிட்டு, விஷமில்லாததும், தானே தீப் பற்றக் கூடியதுமான பாஸ்பரஸ் ஸல்பைடு என்ற உப்பைச் சேர்த்துக் கொள்வது வழக்கம்.

குச்சியைச் செய்ய உபயோகிக்கும் மரத்திலும், இரசாயனம் எவ்வளவோ அபிவிருத்தியை உண்டாக்கி யிருக்கிறது. கலவை மருந்திலே குச்சி முனையைத் தோய்ப்பதன் முன் குச்சியைச் சில உப்பு நீரிலும் மெழுகுத் திரவத்திலும் நனைத்து உலர்த்துகிருர்கள். இம்முறையால், குச்சி எளிதில் எரிகிறது, விடாமலும் எரிகிறது.

ஆகவே, தீப்பெட்டி மூலமாக, இன்றைய வாழ்க்கையை இரசாயனம் எவ்வளவோ சௌகரியமாக்கியிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

### பாத்திரங்கள்

அடுத்தாற்போல் பாத்திரங்களைக் கவனிக்கலாம். மண்பாண்டங்களே மிகவும் ஆரோக்கியமானவை என்பது உண்மை. ஆயினும், பித்தளை வெண்கலம் ஈயம் முதலியனவும் நெடுங்காலமாய் உபயோகத்திலிருந்து வருகின்றன. புளிபோட்டுத் துலக்கினுல் இவை சுத்தமாகப் பளபளவென்ற தோற்றத்தைப் பெறுகின்றன. ஆயினும், அடுப்பில் வைத்தால் கரி படிந்து கெட்டுப் போகின்றன. நம் நாட்டில் பாத்திரங்களும் இவற்றுக்கான உலோகப் பொருளும் ஏராளமாதலால், இப்படிக் கெட்டுப்போவது நமக்கு ஒரு பொருட்டல்ல. ஆனுல், மேலைநாட்டாருக்கு இவை ஏற்றவையல்ல. ஆகவே, வேறு உலோகம் அவர்களுக்குத் தேவையாயிருந்தது.

இந்தத் தேவைக்குத் தக்கபடி இரசாயன வளர்ச்சியின் மூலம் கிடைத்த உலோகம் அலுமினியம். பித்தளை முதலியவற்றைப் பார்க்க இது மலிவு. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே அலுமினியத்தை உபயோகித்தவர்கள் யாருமில்லை. ஆனுல் இன்ருே, ('யுத்த காலத்திலல்ல இதற்குச் சற்று முந்திய காலந்தான் இங்கே கருதத்தக்கது) மிக்க எளிய மக்களுக்குமே அலுமினியமே ஏற்றதாயிருக்கிறது.

எல்லா வகையான களிமண்ணிலும் இது சேர்ந்திருக்கிறது. ஆயினும், இதை அவற்றிலிருந்து பிரித்தெடுப்பது சாத்தியமில்லை. இயற்கையில் கிடைக்கிற 'பாக்ஸைட்' என்ற கனிப்பொருளொன்றிலிருந்துதான், மின்சாரத்தின் துணைகொண்டு, இவ்வுலோகம் பிரித்தெடுக்கப்படுகிறது.

### அலுமினியம்

அலுமினியம் வெண்மையான தோற்றமுடையது; துருப்பிடிக்காது; கைக்காது; இவையே அதனிடமுள்ள அனுகூலங்கள். ஆயினும், அதன்மேல் சாம்பல் பூத்தாற்போற் காணப்படுவது ஒருவகைத் துருதான். அலுமினியத்தோடு பிராணவாயு கூடியதனுல் உண்டான அலுமினியம் ஆக்ஸைடு. இது மெல்லிய படலமாக மேலே படர்ந்து முழுவதும் மூடிவிடுவதால், மூடப்பெற்ற அலுமினியம் பின்னும் கெட்டுப் போவதில்லை; அதாவது 'துருப்' பிடிப்பதில்லை.

அலுமினியத்தை பற்றிய சில விஷயங்களை இங்கே தெரிந்து கொள்வது நல்லது. உப்புச் சம்பந்தமுடைய நீர் எதுவும் (குழம்பு, ரசம் முதலியன) அலுமினியப் பாத்திரங்களைக் கரைத்துவிடும். சில 'நாகரிக'க் குடும்பங்கள் புளிக்குப் பதிலாகச் சோடாமாவு போட்டுப் பாத்திரங்களைத் துலக்குவார்கள்; சோடாவும் அலுமினியத்தைக் கரைத்துவிடும். குழம்பு, ரசம் முதலியன அலுமினியப் பாத்திரங்களில் வைத்தால், சிறிது அலுமினியம் கரைந்து இவற்றோடு சேர்ந்துவிடுகிறது. இது உடம்புக்குகெடுதி என்பது பெரும்பாலான ஆராய்ச்சியாளர் கருத்து. ஆனல் இப்படிக் கரைவது அபூர்வமென்றும், கரைந்து போகிற அலுமினியமும் மிக மிகக் குறைவென்றும், இதனல் கெடுதியே விளையாதென்றும் சிலர் கருதுகிருர்கள். எப்படியாயினும், அலுமினியத்தின் விஷயத்தில் கவனமாயிருப்பது நல்லது.

அலுமினியம் எப்படி மிகச் சமீபகாலத்திலேயே கண்டு பிடிக்கப்பட்டு எங்கும் பெருவழக்காக வந்து விட்டதோ, அப்படியே பல உலோகங்கள் வந்து விட்டன. இயந்திரங்களும் மேட்டார்களும் மின்சாரக் கருவிகளும் பெருகப் பெருக, இவற்றின் உபயோகத்துக்கு என்னென்ன புது மாதிரியான உலோகங்களும் கலப்பு உலோகங்களும் கிடைக்கக் கூடுமென்ற ஆராய்ச்சி தொடர்ந்து பல நாடுகளிலும் நடந்து வருந்திருக்கிறது. டங்ஸ்டன், டாண்டலம் என்பன சொற்ப அளவில் கிடைக்கின்ற உலோகங்கள்; மின்சார விளக்கின் பல்புகளில் உட்புறம் அமைக்கும் கம்பிகள் செய்ய இவை பயன் படுகின்றன. பிளாடினம் என்ற விலை மிகுந்த உறுதியான. உலோகம் நகை செய்ய உதவுகிறது. நிக்கெலும் குரோமியமும், பிற உலோகங்களுக்கு மூலாம் பூசி அவை கறுக்காமல் பாதுகாத்துப் பளபளப்பாயிருக்கச் செய்ய உபயோகமாகின்றன.

நம் நாட்டிலே, வாழ்க்கை எளிய வாழ்க்கை; அதனல் நம்முடைய தேவைகளும் மிகக் குறைவு. சாப்பிடுவதென்ருல், தரையில் உட்கார்ந்து விடுகிறேம். தரையில் இலையைப் போட்டுத் தண்ணீரால் அலம்பி, சாதத்தைக் கையால் பிசைந்து கையால் அள்ளி உண்டு விடுகிறேம். மேலே நாட்டில் இப்படி முடியுமா? ஒவ்வொருவருக்கும் மேஜை நாற்காலி வேண்டியிருக்கிறது. தட்டும், கத்தியும், குத்திக் கடிப்பதற்கான முள்ளும் (போர்க்) வேண்டியிருக்கின்றன. தட்டு, பீங்கானுயிருந்தால் உடைந்து போகிறது. பித்தளை, வெண்கலமாயிருந்தால், விலை அதிகம். அன்றிக் கைத்துப்போகும்; கத்தியும் முள்ளும் இரும்பாயிருந்தால் துருப்பிடிக்கும். எனவே, இவற்றுக்குப் பதிலாக எளிய உலோகமொன்று கண்டு பிடிக்க வேண்டுமென்ற ஆராய்ச்சி நெடுங்காலமாக நடந்து வந்தது.

தவிர, கத்தி என்ருல், அடிக்கடித் தீட்டவேண்டியிருக்கும். நிக்கெல் முலாம் பூசின கத்திகள், பளபளப்பாயிருக்க வேண்டுமானுல், முலாம் கெடக்கூடாது. தீட்டினுல்தான் அது மழுங்கல் நீங்கிக் கூர்மைபெறும்; ஆனல் முலாம் போய்விடும், பளபளப்பும் இராது. ஆகவே தீட்டினுலும் சாணை பிடித்தாலும் பளபளப்புப் போகாததாய், துருப்பிடிக்காமலிருக்கும் இரும்பு ஒன்று வேண்டியிருந்தது.

## குரோமியம்

இதற்குக் குரோமியம் என்ற உலோகம் துணை புரிந்தது. குரோமியத்தை அறியாதவர் இன்று யாரும் இருக்க முடியாது. ஏனென்ருல், எவ்வளவு எளியவருக்கும் ஸைக்கிள் வண்டி பழக்கமானது; அதில் பளபளப்பாயுள்ள பாகங்கள்—மணி, சக்கரத்தின் உட்புறம், கைப்பிடி முதலியன—யாவும் குரோமியம் பூசப் பெற்றவை. குரோமியம் என்பது ஒரு தனி உலோகம். வெள்ளி போல் எப்போதும் பளபளப்பாகவே யிருக்கும்; சற்றே கருமை கலந்த வெண்ணிறமுடையது. துருப்பிடிக்காது. இதனல், முலாம் பூசுவதற்கு இன்று குரோமியத்துக்கு ஈடான உலோகம் வேறெதுவும் கிடையாது.

ஆனல், குரோமியத்தின் இயல்பு மிக்க வேடிக்கையானது. துரு என்பது, குறித்த ஓர் உலோகம் (முக்கியமாக இரும்பு) காற்றிலுள்ள பிராண வாயுவுடன் சேர்ந்து ஆக்ஸைடாக மாறி விடுவதுதான். இரும்பிலேறும் துரு இப்படிப் பட்டதுதான். குரோமியமும் இப்படி மிக எளிதிலே பிராண வாயுவுடன் கலந்து ஆக்ஸைடாகி, துருப்பிடித்து விடுகிறது. ஆனல், அதன் மேற்புறத்தில் மட்டுந் தான் இந்தக் குரோமியம்—ஆக்ஸைடாகிற துரு உண்டாகிறது. இது மிக மிக மெல்லிய ஒரு படலமாக, குரோமியத்தின் மேற்பரப்பெங்கும் படர்ந்து விடுகிறது; இப்படல் கண்ணுக்குத் தெரியாது; அவ்வளவு மெல்லியது. இது படிந்தவுடனே, கீழுள்ள உலோகத்தை மூடிவிட்டு, பின்னும் காற்றுப் பட்டு ஆக்ஸைடு உண்டாகாதபடி மறைத்துவிடுகின்றது. இது காரணமாக. குரோமியம் எப்போதும் பளபளப்புக் குன்ருமலிருக்கிறது. அதன்மேல் ஓரிடத்திலுள்ள ஆக்ஸைடு எந்தக் காரணத்தினுலாவது அகன்று விட்டால், தானே ஆக்ஸைடு ஏற்பட்டு மூடிவிடுகிறது. உண்மையில் எளிதில் துருப்பிடிக்கக்கூடிய இந்தத் தன்மைதான் குரோமியம் துருப்பிடிக்காமல் பளபளப்பாயிருப்பதற்குக் காரணம் என்று சொல்ல வேண்டும்.

கறுக்காத எஃகு என்று சொல்லிக் கடைகளில் இன்று சர்தாரணமாக விற்கும் கத்தி, குவளை, செம்பு, தட்டு முதலியவையெல்லாம், இந்தக் குரோமியத்தைக் கலந்து செய்யப்பட்டவை. எஃகோடு ஆறு அல்லது ஐந்திலொரு

பங்கு குரோமியத்தைக் கலந்தால் இப்படிப்பட்ட துருப்பிடிக்காத எஃகு கிடைக்கிறது. இந்தக் கறுக்காத எஃகினால் செய்யப்பெற்ற பாத்திரங்களே வெள்ளிப் பாத்திரம் இருந்த இடங்களிலெல்லாம் இன்று காணலாம்.

**கரிவாயு**

யுத்தத்தின் விளைவாய், பெட்ரோல் நாற்றத்துக்குப் பதிலாக பஸ்களிலெல்லாம் இன்று கரி வாயு (கோல் காஸ்) நாற்றம் நம்மவர்களுக்கு மிகவும் பழக்கமாகி விட்டது. (கரி வாயு என்று இங்கே சொல்வது வேறு, கரியமில வாயு வேறு.)

இவ்வாயு சகிக்க முடியாத துர்நாற்றமுடையது. விஷத்தன்மை பொருந்தியது.

இக்காலம், மின்சாரத்தின் காலம். இதற்கு முந்திய காலம், மேலே நாடுகளைப் பொறுத்தவரையில், கரிவாயு வின் காலம். பழங்காலத்தில் நம் நாட்டுப்புறங்களில் இலுப்பெண்ணெயும் கடலை எண்ணெயும் இட்ட கை விளக்கு, குத்துவிளக்குகள் எவ்வளவு சாதாரணமாய் வழங்கினவோ அப்படி யேதான் அந்நாட்களில் கரிவாயு விளக்குகள் மிகுதியாயிருந்தன. இன்றும் நமது கல்லூரி களிலுள்ள சோதனைச் சாலைகளில் (லெபாரட்டரிகளில்) கரி வாயுவே அடுப்பெரிக்க உபயோகமாகி வருகிறது. இவ் வாயுவை உற்பத்தி செய்து ஓரிடத்தில் சேமித்து வைத்து அங்கிருந்து, குழாய் மூலமாய்ப் பல வீடு களுக்குத் தண்ணீர் கொடுப்பதுபோல், குழாய் மூலமாக இவ்வாயுவை விடுவார்கள். அடுப்பெரிக்கவே இவ்வாயு இன்றும் அதிகமாக மேலே நாடுகளில் உபயோகமாகிறது; விளக்கெரித்தலும் உண்டு.

விளக்கெரிக்கும்போது, எரியும் சுடரானது அதிக ஒளியைத் தரும்பொருட்டு, வாயுவிலே சில கரிப் பொருள்களையும் காற்றையும் கலந்தார்கள். இதற் கென்று பல வகையான புதுப்புது அடுப்புக்களும் விளக்குகளும் தோன்றின. கரிவாயு நமக்கு அதிகம் பழக்கமில்லை. ஆனால் 'மாண்டில்' விளக்குகள் நமக்குப் பழக்கமுண்டு. கலியாணம், கோயில் திருவிழா முதலிய விசேஷ காலங்களிலும், பிரசங்க மேடைகள், நாடகக் கொட்டகைகள் முதலிய இடங்களிலும், மின்சார வசதியில்லாத ஊர்களில் 'காஸ் லைட்டு' களும், பெட்ரோமாக்ஸ்' விளக்குகளும் இன்னும் உபயோ கத்தில் இருந்துவருகின்றன. இவ்விளக்குகள் ஒளி தருவதற்குக் காரணமாயிருப்பது, ஒரு மாண்டில்; அதாவது நூலினால் பன்னிய ஒரு சிறு வலை. மண்ணெண்ணெயானது ஆவியாக மாறிவந்து, இப் பையினுள் அடங்கிநின்று எரிகிறது. இப்பை எரிவதில்லை; எரிகிற ஆவி மிக்க ஒளிதரும்படி செய்கிறது. நூல் அல்லது ஒருவகை நாரினாலான இப் பையை தோரியம் நைட்ரேட், ஸீரியம் நைட்ரேட் என்ற இருவகை உப்பு நீரில் தோய்த்து உலர்த்தி வைக்கிறார்கள். இதன் பயனாக, ஆவி எரியும்போது, இந்த மாண்டில் தான் எரியாமலே சூட்டை மட்டும் ஏற்று மிகுந்த ஒளியைத் தருகிறது.

**குளோரின்**

நகரவாழ்க்கை பெருகப்பெருக, தண்ணீர்க் கஷ்டமும் பெருகி வருகிறது. சிறிய பட்டணங்களிலும், பெரிய நகரங்களிலும் தண்ணீரை ஏராளமாய்ப் பெரிய குளங் களில் தேக்கி வைத்து அதைக் குழாய் மூலமாக வீடு களுக்குக் கொடுப்பது இப்போது வழக்கமாய்ப் போய் விட்டது. மழைத் தண்ணீர் நிலத்திலே விழுந்து ஒருங்கே திரண்டு ஆற்றிலே ஓடுகிறது. குளத்திலே தேங்குகிறது. ஊற்றிலே ஊறுகிறது. ஆனால் மண் சம்பந்தப் பட்டதனால். அத்தண்ணீர் அசுத்தப்பட்டு விட்டதென்று கருதுகிறார்கள். இந்த அசுத்தத்தைப் போக்க நீரைப் பிராண வாயுவுடன் சம்பந்தப்படுத்தி னால், அதிலுள்ள அசுத்தி முழுவதும் இப்பிராணவாயு வுடன் கூடி எரிந்து போய்விடும், தண்ணீர் சுத்தமா யிருக்கும். இதன் பொருட்டுக் குளோரின் என்ற வாயுவை உபயோகிக்கிறார்கள். சென்னையில் இருப்பவர் களுக்கு இந்த வாயு பழக்கமிருக்கும். சில ஆண்டு களாகக் குழாய்த் தண்ணீர் சகிக்கமுடியாத துர் நாற்றமும் அருவருப்பான ருசியும் பெற்றிருப்பது இந்த வாயு காரணமாகத்தான், மலேரியா; காலரா முதலிய நோய்கள் பரவியிருக்கின்றன என்று சொல்லி, மிக்க ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். மக்களுக்கு எந்த நோயும் வந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தினாலே, குடி தண்ணீரைச் 'சுத்தப்' படுத்தியதன் விளைவுதான் இது.

குளோரின் வாயு கொஞ்சம் பச்சை நிறமுடையது; விஷ வாயு. சென்ற ஐரோப்பிய யுத்தத்தின்போது, சண்டை போட்டு எதிரியை வெல்லவோ கொல்லவோ முடியாத போது, இவ்விஷக் காற்று உபயோகிக்கப் பட்டு வந்தது. இவ்வாயுவை உட்கொண்டால், மூச்சுத் திணறி, நுரையீரல்கள் யாவும் கெட்டு, விரைவிலே இறக்க நேர்வதும் உண்டு. நீரைச் சுத்தப்படுத்த இவ் விஷக் காற்றை உபயோகிப்பது வியப்பளிக்கலாம். நீரில் பிராண வாயுவும் ஹைட்ரோஜனும் கூடியிருக் கின்றன. குளோரின் வாயுவானது இந்த ஹைட்ரோஜ னோடு கூடி ஹைட்ரோ குளோரிக் ஆஸிட் என்ற திராவகமாகி, பிராணவாயுவை விடுவிக்கிறது. சுத்தம் செய்யும் வேலை இப்படி விடுவிக்கப்பெற்ற பிராண வாயுவினால்தான் நடைபெறுகிறது.

(24 ம் பக்கம் பார்க்க)

# பொதுசனப் பாதுகாப்புத் திருத்தச் சட்டம்

## தவருன பிரசாரத்துக்கு அரசாங்கத்தின் பதில்

ஆசியாவிலே ஜனநாயகத்துக்கு உதாரணமாகக் கொள்ளப்படும் இந்தியாவில் பொதுசனப் பாதுகாப்புத் திருத்தச் சட்டத்தில் காணப்படுவனவற்றிலும் பார்க்கக் கடுமையான ஏற்பாடுகள் அவர்களின் சாதாரண சட்டத்தில் இடம் பெற்றுள்ளன. உதாரணமாக எவ்வித விசாரணையுமின்றி ஒருவரைக் கட்டுக் காவலில் வைக்க அங்குள்ள சட்டம் இடமளிக்கிறது.

பொதுசனப் பாதுகாப்புச் சட்டம் உண்மையில் குரூரமான சட்டமுமன்று. மூர்க்கத்தனமான ஜன நாயக விரோதமான சட்டமுமன்று. இது ஜன நாயகத்தைப் பாதுகாப்பதற்கும், சமாதானத்தையும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கும் உதவக்கூடிய ஒரு சட்டமாகும். நமது மக்கள் முன் னேறவும் சுபீட்சவாழ்வைப் பெறுதற்கும் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிப் பாதுகாத்தல் இன்றியமையாத ஒன்ருகும்.

இவ்வாறு இலங்கை அரசாங்கத் தகவல் இலாகா வெளியிட்டிருக்கும் பொது சனப் பாதுகாப்புத் திருத்தச் சட்டத்தைப்பற்றிய விளக்கப் பிரசுரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இப்பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது :—

பொதுமக்களையும், தொழிலாளர்களையும் தவருன வழியில் இட்டுச் செல்வதற்காக, சில பிரிவினர் பொதுசனப் பாதுகாப்புத் (திருத்தச்) சட்டத்தைப்பற்றித் தவருன கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

இவ்விதமான தவருன கருத்துக்களை பரப்பக் காரணம் நாட்டில் குழப்பத்தை உண்டுபண்ணி அரசாங்கத்தைக் கவிழ்க்க புரட்சிகரமானதோர் முறையைக் கையாண்டு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவெனத் தெரியவருகிறது. அவர்கள் ஜன நாயக முறையிலே தேர்தலில் நின்று மக்களின் வாக்குரிமையைப் பெற்று அதிகாரத்தைப் பெறமுடியாதென்பதை உணர்ந்திருக்கிருர்கள். அதனுலேயே இந்த நடவடிக்கை.

பெருந்தொகையான மக்களும் தொழிலாளர்களில் பெரும்பான்மையோரும் இந்த நிலையை உணர்ந்து வருவதால் அரசியல் சதுரங்கத்திலே சூதாட்டப் பகடைகளாக இடங்கொடுக்க மாட்டார்கள் என்பது தெளிவாகிறது.

பொதுசனப் பாதுகாப்புத் (திருத்தச்) சட்டம் சம்பந்தமாக தவருன எண்ணங்களைப் பரப்பி வருவதால் நிலைமையைத் தெளிவாக்க வேண்டியது அவசியமாகிறது. சில கோஷ்டியினர் நாட்டைத் துண்டுபோடும் நோக்கத்துடன் அல்லது மத, இன, மொழி அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்காக அல்லது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக—ஜனநாயக முறையிலே பெரும்பான்மை மக்களின் வாக்குரிமையைப் பெற்று இவற்றைப் பெறமுடியாதாகையால்—ஆபத்தான இயக்கங்களில் இறங்கும்பொழுது சகஜமான சூழ்நிலையிலே உபயோகிக்கப் படக்கூடிய சாதாரண சட்டமோ, நிர்வாக முறைகளோ மக்களைப் பாதுகாக்கவும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும் போதியன வாகா.

கடந்த வருடம் மே மாதத்திலே, அப்பொழுது ஏற்பட்ட நிலைமையைச் சமாளிப்பதற்காக அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்த வேண்டியது அவசியமாயிற்று. சில வருடங்களுக்கு முன் நாடு இருந்த நிலைமையைக்கொண்டு பொது சன பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டுமென அரசாங்கக் கட்சி கருதியிருந்தது உண்மையே. ஆனல் நாம் மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகள் அரசாங்கமும் பெருந் தொகையான பொது மக்களும் அத்தகைய அசாதாரண நிலைமைகளைச் சமாளிப்பதற்கு விசேஷ சட்டங்கள் அவசியமெனக் கருதியதைச் சரியென நிரூபித்துவிட்டன. வழக்கிலிருக்கும் பொதுசனப் பாதுகாப்புச் சட்டம் மாத்திரமே இந்த அவசியத்தைப் பூர்த்தி செய்கிறது. ஆனல் நாடு முழுவதும் தவிர்க்கமுடியாத அவசரகால நிலைமை ஏற்படும்பொழுது மாத்திரமே இதனை உபயோகிக்க முடியும். எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேராவும், பாராளுமன்றத்திலே, அரசாங்கம் 24 மணி நேரம் பிந்தியே அவசரகால நிலைமையைப் பிரகடனஞ் செய்திருக்கிறது எனக் குறிப்பிட்டிருக்கிருர். பழைய பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி நாடு முழுவதுமே அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்படவேண்டும். (அதுவும் கூட முன்னர் எடுத்துக் காட்டியது போல் நாடு முழுவதிலுமே குழப்ப நிலை ஏற்படும்பொழுது மாத்திரமே இதனைச் செய்ய முடியும்.) அத்தகைய சந்தர்ப்பங்களிலே குழப்பநிலை ஏற்பட்டிருக்கும் சிறிய பிரதேசத்திலே நிலைமையைச் சமாளிக்க போதிய போலிசார் இல்லாத போது ஆகச் சிறிய நடவடிக்கையாக ஒருநாள் அல்லது இரண்டு நாளைக்கு அப்பிரதேசத்தில் மாத்திரம் ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தவோ போலிசாருக்கு

உதவியாக மிகச் சிறிய ராணுவப் படையை அழைக்கவோ அவசரகால நிலைமையை நாடு முழுவதும் பிரகடனப்படுத்துவதற்கு முன், நடவடிக்கை எடுக்க முடியாது. உதாரணமாக கடந்த மே மாதத்திலே அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்துவதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னரே நாட்டின் சிற்சில பிரதேசங்களில் குழப்ப நிலை உருவாகிக் கொண்டிருந்தது. அங்கு சில ராணுவத்தினர் அனுப்பப்பட்டிருந்தபோதிலும், அப்பிரதேசங்களில் உருவாகிக் கொண்டிருந்த குழப்ப நிலையைத் தடுப்பதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்க அவர்களுக்கு அதிகாரம் இருக்கவில்லை. அதனைச் செய்ய அவர்களுக்கு அதிகாரம் இருந்திருந்தால், அங்கு ஏற்பட்ட பெருஞ் சேதங்களை- இன்னல்களை தவிர்த்திருக்கலாம். எனவே, பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வர வேண்டியது அவசியமென்பது தெளிவாகியது. பொதுசனப் பாதுகாப்புத் (திருத்தச்) சட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கும் திருத்தங்கள் சட்டத்தின் கடுந் தன்மையைக் குறைக்கிறதேயன்றி கூட்டுகின்றதில்லை.

**திருத்தச் சட்டத்தில் அடங்கியிருக்கும் விஷயங்கள் யாவை?**

1. இச்சட்டம் குறிப்பிட்ட ஓர் பிரதேசத்திலே அவசரகால நிலைமையைப் பிரகடனஞ்செய்ய உரிமையளிக்கிறது. தற்பொழுது அவசரகால நிலைமையை நாடு முழுவதிலுமே பிரகடனஞ் செய்தாகவேண்டும்.

2. அவசியம் ஏற்பட்ட பொழுது எந்த ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திலாவது (சில நாட்களுக்கு மாத்திரம்) அவசரகால நிலைமையை பிரகடனஞ் செய்யாது ஊரடங்குச் சட்டத்தை நிலைநாட்ட இடமளிக்கிறது. தற்போதைய அவசர கால நிலைமையின்போது நாடு முழுவதிலும் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதன் பிறகு, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு பிரதேசத்திலே மாத்திரம் ஊரடங்குச் சட்டத்தை சில நாட்களுக்கு பிரகடனஞ் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனல் பாரதூரமான குழப்ப நிலை உருவாவது தடுக்கப்பட்டது. நாடு முழுவதிலும் அவசரகால நிலைமை அமுலிலிருந்ததினாலேயே இந்த நடவடிக்கையை எடுக்க முடிந்தது. திருத்தச் சட்டம் நாடு முழுவதும் அவசரகால நிலைமையைப் பிரகடனப் படுத்தாது ஊரடங்குச் சட்டத்தை நிலைநாட்ட உதவுகிறது. அவசரகால நிலைமையை, நாடு முழுவதிலும் குழப்பநிலை ஏற்பட்டாலொழிய பிரகடனஞ் செய்ய முடியாது.

3. திருத்தச் சட்டம் நாடு முழுவதும் அவசரகால நிலைமையைப் பிரகடனஞ் செய்யவேண்டிய அவசியத்தைத் தவிர்த்து ஏதாவதொரு இடத்தில் போலிஸாரால் சமாளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டால் போலிஸாருக்கு உதவி செய்ய ராணுவத்தினரை வரவழைக்கவும் இடமளிக்கிறது.

4. கடைசியாக இத்திருத்தச் சட்டம் நாடு முழுவதும் அவசரகால நிலைமையைப் பிரகடனஞ் செய்யாது மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான ஒரு சேவையை அவசிய சேவையாக பிரகடனஞ் செய்ய உதவியளிக்கிறது. இந்த உரிமையை தொழிற் சங்க உரிமைகளை கட்டுப்படுத்த உபயோகப்படுத்தப்படலாமென எடுத்துக் காட்டப்பட்டதனாலேயே அதனைத் திருத்தி எல்லாச் சந்தேகங்களையும் அகற்றுவதென அரசாங்கம் முடிவுசெய்தது. தற்பொழுது திருத்தச் சட்டத்திலுள்ள விதிகளின்படி ஒரு தொழிற் சங்கம் கைத்தொழிற் தகராறு காரணமாக எடுக்கும் நடவடிக்கை இதில் இடம்பெறமாட்டாது. கைத்தொழிற் தகராறு என்றால் என்னவென கைத்தொழிற் தகராற்றுச் சட்டத்தில் விபரமாக விவரிக்கப்பட்டிருக்கின்றது. வேதனங்களும் சம்பளங்களும், சேவை நிலைமைகள், உத்தியோகம் வகித்தல், சேவையிலிருந்து விலக்குதல் போன்ற விஷயங்களும் இதிலடங்கும். கைத்தொழிற் தகராறுகளை விளக்குவதற்கு "உண்மையாக" என்ற சொல் உபயோகிக்கப்பட்டிருப்பதைக் குறித்து எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டதன் காரணமாக அச்சொல்லும் அகற்றப்பட்டது. அதன்படி பார்த்தால் கைத்தொழிற் தகராறு எனக் குறிப்பிடும் பொழுது தொழிற் சங்கங்கள் எடுக்கும் நடவடிக்கை இப்பிரிவின் விதிகளுக்குட்படாது. **இதிலிருந்து இப்புதிய மசோதா கடுமையானதெனவோ பயங்கரமானதெனவோ பொதுமக்களும் சரி, தொழிலாளர்களும் சரி பயப்படவேண்டிய காரணமில்லை. தற்பொழுது முன்னிருந்த நிலையிலும் பார்க்க சட்டத்தின்பிடி தளர்த்தப்பட்டிருக்கிறது. முன்னரெல்லாம் நாடு முழுவதும் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்துவதன் மூலம் கடுமையான சட்ட விதிகளை இயற்றவும் அமுலுக்குக் கொண்டுவரவும் கூடியதாயிருந்தது.** புதிய சட்டத்தின்கீழ் மிகவும் அருமையாக, பாரதூரமான சம்பவங்கள் ஏற்பட்டு நாடு முழுவதும் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டாலன்றி அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்படமாட்டாது. அத்துடன் பாரதூரமான குழப்பம் பரவுமுன் நடவடிக்கை எடுக்க இச்சட்டம் உதவியளிக்கிறது. தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் இச்சட்டம் அவர்களின் சட்டரீதியான தொழிற் சங்க உரிமைகளைப் பாதிக்கின்றதென பயப்பட எதுவிதமான காரணமுமில்லை. நாட்டில் குழப்பத்தை உண்டுபண்ண விரும்புபவர்களும் அரசாங்கத்துக்கெதிராக நடவடிக்கை எடுத்து தங்களின் நோக்கங்களைப் பூர்த்தி செய்ய விரும்பி மக்களுக்கு சொல்ல முடியாக் கஷ்டங்களை விளைவிப்பவர்களும்,

அதிகாரத்தைப் பெற தொழிலாளர்களைத் தம் கைப் பொம்மைகளாக உபயோகிக்க விரும்புபவர்களும் மாத்திரமே இச்சட்டத்தை கண்டு பயப்படவேண்டிய வர்களாவர்.

5. இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டு பத்து நாட்களுக்குள் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்படவேண்டும். இந்நடவடிக்கையை மாற்ற வோ ரத்துச்செய்யவோ பாராளுமன்றத்துக்கு அதிகார முண்டு.

ஆசியாவிலே ஜனநாயகத்துக்கு உதாரணமாகக் கொள்ளப்படும் இந்தியாவில் இச்சட்டத்திலும் பார்க்க கடுமையான கொள்கைகள் அவர்களின் சாதாரண சட்டத்தில் இடம்பெற்றிருக்கின்றன. உதாரணமாக எவ்வித விசாரணையுமின்றி ஒருவரைக் கட்டுக்காவலில் வைக்க சட்டம் இடமளிக்கிறது.

அரசாங்க சேவையிலும், வெளியிலும் உள்ள தொழி லாளர்கள் அவர்களின் நிலைமையை அபிவிருத்தி செய் வதற்காகவும், தொழிற் சங்க இயக்கத்தை பலப்படுத்த வும் அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகளை நன்கறிவர்.

## குடித்தனமும் இரசாயனமும்......

(21 ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லா நாடுகளிலுமே, ராணுவததாருக்கு அனுப்பும் நீர் விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்துகிறார்கள். அந்த நீரிலே ப்ளீச்சிங் பௌடர் என்ற கால்ஸியம்—குளோரின் உப்பொன்றை இடுவார்கள்; இது தேவை யான குளோரின் வாயுவைத் தருகிறது. தவிர, குளோரின் வாயுவை அதிக அமுக்கத்துக்குட்படுத்தித் திரவமாக்கி, நீரைக்கொண்டு செல்லும் பெரிய குழாய்களிலே இது சொட்டுச் சொட்டாய்ச் சேரும்படி செய்வதுண்டு.

குளோரின் வாயு விஷமுடையதாதலால், அதைச் சேர்ப்பதில் அளவு கடந்து போனால், கெடுதல். சென்னை யிலே இக்காலத்தில் சொறி சிரங்கு அதிகமாயிருப்பதற் குக் காரணம் மடித்துப்போன அரிசியாயிருக்கலா மென்றும் உப்பாயிருக்கலாமென்றும் சொல்கிறார்கள். குளோரினிட்ட தண்ணீரும் இக்காரணங்களோடு சேர்த்துக்கொள்ளத்தக்கதா என்பது ஆராய்தற் குரியது.


### உடை

குடித்தனத்துக்கு வேண்டிய வெளிச்சம், நெருப்பு, நீர் என்பவற்றைப் பார்த்தோம். அடுத்தாற் போலுள்ளது உடை. உழ மண்ணைப் போட்டு உடை வெளுப்பது கர்நாடக முறை; நாட்டுப்புறத்தில் சிற்சில இடங்களில் இன்றும் இருக்கிறது. ஆனால் நகர்ப்புறத் தில் பெரும்பாலும் சோடா மாவும் சோப்புமே அதிகம். தாவர எண்ணெய் அல்லது மிருகக் கொழுப்பெண்ணெ யையும் சோடாவையும் சேர்த்து நெடுநேரம் கொதிக்க வைத்தால் சோப்பு உண்டாகிறது. எண்ணெயிலடங்கி யுள்ள கிளிஸரைன் சத்துத் தனியே பிரிந்து விடுகிறது. (இந்தக் கிளிஸரைன் கூந்தலுக்கேற்ற தைலமாகவும் வெடி மருந்து செய்யும் தொழிலுக்கும் பயன் படுகிறது.) சோப்புத் தண்ணீரில் கரைந்து நுரை தந்தால்தான் துணி வெளுக்கக் கூடியதாயிருக்கும். ஆனால் எல்லா வகையான நீரிலும் சோப்புக் கரைந்து விடுவதில்லை. சுண்ணும்புச் சத்துக் கலந்த நீரில் சோப்பு கரைந்து நுரைக்காது; முக்கால் பங்குக்குமேல் கரைந்த பிறகுதான் நுரைக்க ஆரம்பிக்கும்; அதுவரை கரைத்ததத்தனையும் வீண்தான். இப்படிப்பட்ட நீரை வல்—நீர் என்று சொல்வதுண்டு. சோப்பு எளிதிலே கரைந்து நுரைக்கக் கூடிய நீருக்கு மெல்—நீர் என்று சொல்வார்கள். சலவைத் தொழிலுக்கு அதிக விர யத்தையுண்டுபண்ணுகிற வல் நீரை மெல் நீராக்க இரசாயனம் பல முறைகளை உதவியிருக்கிறது. அவற்றுள் முக்கியமான முறை, ஸியோலைட் என்ற கனிப்பொருளை உபயோகிக்கும் முறை. இது ஸோடியம் கூடிய உப்பாலானது. வல்நீரில் கால்ஸியம் கூடிய உப்பு இருக்கிறது; இக்கால்ஸியத்தை விலக்கி விட்டு ஸோடியமாக்கிவிட்டால், அது மெல்-நீராகிவிடும். அந்நீரை ஸியோலைட் மூலமாகச் செலுத்தினால், இதி லுள்ள ஸோடியத்தை அந்நீர் எடுத்துக்கொண்டு தன் னிடமுள்ள சுண்ணும்புச் சத்தை ஸோடிய உப்பாக மாற்றிக்கொண்டு, கால்ஸியத்தை ஸியோலைட்டிடம் விட்டுவிடுகிறது. இந்த முறை மேலைநாடுகளில் மிகுதி யாக உபயோகத்திலிருந்து வருகிறது.

தேயிலைத்தூள், காப்பித்தூள் முதலியவற்றிலிருந்து கஷாயமிறக்குவதற்கும் இந்த மெல்-நீரே ஏற்றதென்று கண்டிருக்கிறார்கள். தூளின் மணமும் கஷாயத்தின் நிறமும் கெடாமல் இதன் மூலம் கிடைக்கின்றன. வல்-நீர் உபயோகத்தால் மணமும் குறைகிறது. 'டிகாக் ஷன்' நிறமும் கெடுகிறது. எனவே, மெல்-நீர்க் குளமோ கிணறோ கிடைக்காமல், எல்லாம் சுண்ணும் புச் சத்துள்ள நிலமாயிருந்து, சுண்ணும்புக் கார முடைய வல்-நீராகவே கிடைக்கிற இடங்களில், அதை மெல்-நீராக மாற்றும் அவசியம் ஏற்படுகிறது; அங்கெல்லாம் இந்த ஸியோலைட் முறை உபயோகத்தி லிருப்பதில் வியப்பில்லை.

விளக்கேற்றவும், அடுப்புப் பற்றவைக்கவும், குடி நீரைச் சுத்தப்படுத்தவும், ஆடை வெளுக்கவும் இரசாயனம் எப்படி உதவியது என்பதை இங்கே சிறிது பார்த்தோம். இரசாயனம் தொழிற்படும் வகைகளிலே இவை ஒரு சிறு பகுதிதான்.

குமரிமலர் 13.



கொள்ளுப்பிட்டியில் தபாற் சேமிப்பு வங்கிக்கான ஏழு மாடக் கட்டடத்திற்கு தபால், தந்தி அமைச்சர் அத்திவாரக்கல் இடுகிறுர்.

# புராதன யாழ்ப்பாண நாணயங்கள்

(திரு. ம. பொ. செல்வரத்தினம் அவர்கள்)

புராதன நாணயங்கள், மற்றும் புராதனப் பொருள்கள் போன்று அழிவதோ அன்றி நிலைகுலைவதோ இல்லை. இதனால் புதை பொருள் ஆராய்ச்சியில் புராதன நாணயங்கள் மிக மேலாக மதிக்கப்படுகின்றன. கீழைத்தேசங்களில், மதிப்புமிக்க பொருள்களைப் பாது காப்புக்கருதிப், பூமிக்குள் புதைத்து வைத்தல் ஒரு பெரு வழக்காக இருந்தது. இவ்வழக்கத்துக்கேற்பப் புராதன மக்கள் நாணயங்களையும் பூமிக்குள் புதைத்து வைத்திருந்தனர். இவை காலத்துக்குக்காலம் தோண்டியெடுக்கப்படுவதனால், மறைந்த நாகரீகங்களைப்பற்றிய வரலாறுகளை அறியக்கூடியதாயிருக்கிறது. புராதன நாணயங்கள், நாட்டின் பொருளாதாரம், வர்த்தகம் பற்றித் தெரிவிக்கின்றன. புராணக் கதைகள் பற்றியும், சமயம் குறித்தும் குறிப்புகள் தருகின்றன. எல்லாவற்றிற்கும் மிக மேலாகக் காலவரை ஆராய்ச்சிக்கு நாணயங்கள் இன்றியமையாத பொருளாய் விளங்குகின்றன. கீழைத் தேசத்திலும் மேலைத்தேசத்திலும் கி. மு. 8ந் நூற்றாண்டளவில் நாணயங்கள் வழங்கின என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். விற்கொடி, புலிக்கொடி, மீனக்கொடி தாங்கிய மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்கள், தமிழகத்தில் பெருவாரியாக நாணயங்களை வெளியிட்டனர். ஈழநாட்டில் எல்லாளன் என்னும் தமிழ் மன்னன் (கி. மு. 145-101)ல் மிகுந்தலையில் ஒரு தூபியினைத் தமது இரதம் தற்செயலாக உடைத்துச் சில செங்கற்களை விழுத்தியதற்காகச் சிந்தை நொந்து 15,000 'கஹப்பன' என்ற நாணயங்களைச் செலவழித்துத் தூபியைப் புதுப்பித்தான் என்று மகாவம்சம் என்னும் இலங்கைச் சரித்திர காவியங் கூறும். புராதன யாழ்ப்பாணத்தில், நல்லூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட செகராசசேகரர், பரராசசேகரன் என்ற ஆரியச் சக்கரவர்த்திகள் 'சேது' நாணயங்களை வெளியிட்டுப் புகழ்கொண்டனர். புராதன யாழ்ப்பாணத்தில் அரசிருக்கையாய் விளங்கிய நல்லூர், கோட்டையாய் அமைந்த கோப்பாய், சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த பிற நகரங்களும் இந் நாணயங்களை வெளிப்படுத்தியிருக்காவிடில் யாழ்ப்பாணச் சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகளும் நாணயங்களை வெளியிட்டனரா என்ற சந்தேகமே மக்கள் மனதில் குடிகொண்டிருக்கும். புராதன நாணயங்கள் கிடைத்தால் போதுமா! இவற்றைத் தேடிப் பாதுகாத்து ஆராய்ந்தாலன்றிச் சரித்திரத்தை அறிய முடியுமா!

இலங்கைப் புராதன நாணயங்களைக் காலத்துக்குக் காலம் சேகரித்து, இவற்றைச் சரித்திர ரீதியாக ஆராய்ந்து நூலினை வெளியிட்ட பெருமை பிரபல சரித்திர ஆராய்ச்சியாளராய் விளங்கிய எச். டபிள்யு. கொட்றிங்றன் அவர்களைச்சாரும். பிரபல ஆராய்ச்சியாளராய் விளங்கிய நல்லூர் ஞானப்பிரகாச சுவாமிகளும், முதலியார் சீ. இராசநாயகம் அவர்களும் இத்துறையில் அரும்பணியாற்றினர். இப்பெரியார்களுக்குத் தமிழ் உலகம் என்றென்றும் கடமைப்பட்டது. இவ்வறிஞர்களுடைய ஆராய்ச்சி நூல்களே இச்சிற்றுரையை நிகழ்த்தவும் பெரிதும் துணைபுரிந்தன. ஞானப்பிரகாச சுவாமிகள் 'யாழ்ப்பாண அரசர்களது மறந்தொழிந்த நாணயங்கள்' என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையில் இந்நாணயங்களைப்பற்றி மிக விரிவாக ஆராய்ந்தனர். முதலியார் இராசநாயகம் அவர்கள் புராதன யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூலில் இந் நாணயங்கள் குறித்து எழுதினர். சேது நாணயங்களின் சிறப்பியல்புகளைப்பற்றி ஆராயுமுன் இந்நாணயங்களின் காலம், இதனை வெளியிட்ட அரசர்கள் முதலியன குறித்து அறியவேண்டியது இன்றியமையாதது. சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி 1344ல் கடல் பலம் பொருந்திய அரசனாய், பராக்கிரமத்துடன் விளங்கி, தென்னிந்திய அரசர்களோடு உறவுபூண்டிருந்தான் என்று பிரபல அராபிய பிரயாணி இபுன்வத்தூதா தமது பிரயாணக்கட்டுரையில் குறிப்பிட்டனர். இப்பிரயாணியின் கட்டுரையின் பிறகுறிப்புகளிலிருந்து, இவ்வாரியச் சக்கரவர்த்தியென்பான் யாழ்ப்பாண அரசர்களில், முதலாவது அரசன் அல்ல வென்றும், இதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே யாழ்ப்பாண அரசு தொடங்கியிருக்கவேண்டுமென்பதும் புலனாகிறது. மகாவம்சம் என்னும் இலங்கைச் சரித்திர காவியம் ஆரியச் சக்கரவர்த்திகளைப்பற்றி, முதன்முதலாக புகனேகவாகு அரசர் காலத்தில் (1272—1283 கி. பி.) தான் குறிப்பிடுகிறது. இவ்வரசர்கள் தொகுதியில் பராசசேகரன் 1478ல் ஆண்டிருக்கவேண்டுமென்பது தமிழ் நூல்களாலும் பிற வரலாறுகளாலும் அறிய முடிகின்றது. இவ்வரசனுக்கு முன், பதினொரு அரசர்களாவது ஆண்டிருக்கவேண்டுமென்பது யாழ்ப்பாண வைபவ மாலையால் பெறப்படுகிறது. குறைந்தது ஒவ்வொரு அரசருக்கும் 25 வருடங்கள் கொடுத்துக் கணக்கிட்டால் 13ந் நூற்றாண்டு முற்பகுதியில் முதல் ஆரியச் சக்கரவர்த்தி ஆண்டிருக்கவேண்டுமென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவ்வரசர்கள் செக

ராசசேகரன் பரராசசேகரன் என்ற பெயர்கள்கொண்டு அழைக்கப்பட்டனர். செகராசசேகரன் ஆதரவின்கீழ் பாடப்பட்ட தமிழ் நூல்களெல்லாம் செகராசசேகரனைப் பெருமன்னன் என்றே இயம்புகின்றன. சோமன் என்ற பிராமணனுல் பாடப்பட்ட செகராசசேகர மாலே என்னும் சோதிடநூல் இவன் பெரும் புகழையும் கூறுகிறது. இந்நூலின் சிறப்புப் பாயிரத்தில் செகராசசேகரனின் மூதாதையர்களைப்பற்றிய வரலாறுகளும் இடம் பெறுகின்றன. இராமபிரானே இவ்வரசமரபினைத் தொடக்கி வைத்தனரென்றும், இராமேஸ்வரத்தைத் தாபித்த இராமபிரான், இவ்வாலயத்தைச் சேவிக்கப் பிராமணர்களை அழைப்பித்தனரென்றும், இப்பிராமணர்களில் இருவரை அரசாக்கினர் என்றும் இந்நூல் கூறுகிறது. இராமேஸ்வரத்தோடு இவ்வரசர்கள் கொண்ட தொடர்பைக் காட்டவே இவ்வரலாறுகள் எழுந்ததென்று கூறில் பொருத்தமானது. ஆரியச் சக்கரவர்த்திகள் என இவ்வரசர்கள் பெயர் பூண்டமையால், இவ்வரசர்கள் ஆரியர்கள் அல்லது பிராமணர்கள் என்று கருதப்பட்டிருக்கவேண்டும். க்ஷத்திரியர்களும், அரசர்களும் பூநூல் அணிந்தனர் என்பதைப் புராதன நூல்கள் கூறுகின்றன. செகராசசேகரன் பூநூல் அணிந்திருந்ததை 'முத்தமிழ் தேர் செகராசசேகர மன்றிரு மார்பின் முன்நூலென்ன' என்ற செகராசசேகரமாலேயால் பெறப்படுகிறது. சோழர் பாண்டியர் முதலிய வேந்தர்களோடு இவ்வரசர்கள் தொடர்புகொண்டதாகவும் இந்நூல் தொடர்ந்து கூறுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக 'கந்தமலேயாரியர்கோன் செகராசசேகரமன் கங்கை நாடன் வென்றி சேரிய வாரியர்களாதிபன்' என்று இந்நூல் கூறுகிறமையால் ஆரியச் சக்கரவர்த்திகள் கந்தமலேயைச் சார்ந்தவர்கள் என்பது வெளிப்படையாகிறது. கந்தமலே இராமேஸ்வரத்தைச் சேர்ந்ததென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இன்னேரன்ன வரலாறுகளால் ஆரியச் சக்கரவர்த்திகள் இராமேஸ்வரத்தோடு நெருங்கிய தொடர்பு பூண்டிருந்தனர் என்பது புலப்படுகிறது. டீகுவேரேஸ் என்னும் போர்த்துக்கேய ஆராய்ச்சியாளர் 1687 ல் எழுதுகையில் சேதுதீர்த்தத்தையும் இராமேஸ்வரத்தையும் குறிப்பிட்டனர். இராமேஸ்வரமும், சேது தீர்த்தமும் கீழைக்கரையில் யாவராலுஞ் சென்று தரிசிக்கப்பட்டதென்றும், இத்தலங்கள் தென் காசி என்று சிறப்பெய்தியதென்றும் தொடர்ந்து குறிப்பிட்டனர். யாழ்ப்பாண அரசர்கள் இராமேஸ்வரத்துக்கு நன்கொடை வழங்கியதைக் கர்ண பரம்பரை வரலாறுகள் கூறுகின்றன. 15ந் நூற்ருண்டின் மூற்பகுதியில் பரராசசேகரன் என்னும் அரசன் இராமேஸ்வரத்தில் சில கட்டடங்களைக் கட்டுவித்தான் என்று பிற வரலாறுகள் கூறுகின்றன. இவ்வரலாறுகளால் இத்தலங்களில் யாழ்ப்பாண அரசர்கள் மிக்க பயபக்தி கொண்டிருந்தனர் என்பதும் புலப்படுகிறது. 'சிங்கை ஆரியன் சேது காவலன்' என்ற தெட்சண கைலாயபுராணத்தாலும் 'சேதுகாவலன் விஞ்சைவிஞ்சு செகராசசேகரன்' என்ற செகராசசேகர மாலேயாலும் சேதுவுக்கும் மிக்க உரிமை கொண்டு விளங்கினுர்கள், இவ்வரசர்கள் என்பதும் வெளிப்படையாகிறது. இப்படிச் சேதுகாவலர்களாய் விளங்கிய அரசர்கள் தங்களுடைய அரசாங்கப் பத்திரங்களிலும், நாணயங்களிலும் 'சேது' என்ற வாசகத்தைப் பொறித்திருந்தனர் என்று கூறில் மிகையாகாது. தென்னிந்தியத் தமிழ் கல்வெட்டுகளும், இலங்கையில் காணப்பட்ட தமிழ் கல்வெட்டுக்களும் 'சுவஸ்தி' ஸ்ரீ என்றே தொடங்குகின்றன. ஆனுல் கேகாலேப்பகுதியில் கோட்டகாம என்னும் கிராமத்தில், சிங்கை நகராசிரியரின் வெற்றிக்கு அறிகுறியாக விளங்கிய தமிழ் கல்வெட்டுச் 'சேது' என்றே தொடங்குதல் நோக்கத்தக்கது. இக்கல்வெட்டுப் பின்வருமாறு—

சேது : கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினுர்
காமர்வளைப்பங்கயக்கை மெற்றிலதம்
பாரித்தார்
பொங்கொலி நீள் சிங்கை நகராரியனைச்சேரா
வனுரேசர் தங்கள் மடமாதர்தாம்.

இக்கல்வெட்டுக் குறித்து வெவ்வேறு விதமான கருத்துகள் கொள்ளப்படுகிறதெனினும், மறுக்கமுடியாத செய்தியொன்று வெளிப்படையாகிறது. அதாவது சிங்கை நகர் ஆரியன் என்பான் ஈழநாட்டில் ஒரு மாமன்னனுக விளங்கினுன் என்பது இக்கல்வெட்டால் உலகறியச் செய்யப்படுகிறது.

இவ்வரசர்கள் தங்கள் சீரும் சிறப்பிற்கேற்ப கொடிகள் தாங்கியதுமன்றி, நாணயங்கள் வெளியிட்டனர் என்பதை 'விடைக்கொடியும் சேதுவு நீள்கண்டிகளொன்பதும் பொறித்து மிகைத்த கோவும்' என்று செகராசசேகரமாலே, செகராசசேகரனைப் புகழுமாற்ருல் அறியமுடிகிறது. இராமேஸ்வரம், சேது முதலிய சேத்திரங்களில் கொண்ட பக்திக்கு அறிகுறியாக விளங்குவதற்குச் **'சேது' என்ற** விளக்க வாசகத்தையும், சைவ சின்னங்களாகிய திரி சூலம், நந்தி, பிறை முதலியவற்றையும், இவ்வரசர்கள் தங்கள் நாணயங்களில் பொறித்தனர். இன்றும், தமிழ் மக்கள் தங்கள் பத்திரங்களில் தங்கள் பிரிய தெய்வத்தின் பெயரை அல்லது சேத்திரத்தின் பெயரை உதாரணமாகத் 'திருச் சிற்றம்பலம்' என எழுதித் தொடங்குதல் நோக்கத்தக்கது. விஜய நகர அரசர்கள் விஷ்ணுவின் அவதாரமாகிய வராகத்தைத் தமது நாணயங்களில் பொறித்தனர். அதனுல் இந்நாணயங்கள் வராகன் என்று வழங்கப்பட்டன. இதேபோன்று சைவ சின்ன

மாகிய நந்தியை ஆரியச் சக்கரவர்த்திகள் தங்கள் நாணயங்களில் பொறித்தனர். தென்னிந்தியாவில் 6 ந் நூற்றுண்டில் சைவாலயங்களில் சிவலிங்கத்துக்கு முன்பாக நந்திகள் அமைக்கப்பட்டதெனலாம். 7 ந் நூற்றுண்டில், மகாவலிபுரத்தில் பல்லவ சிற்பக் களஞ்சியமாக விளங்கும் பகோடாக்கள் அல்லது இரதங்களோடு யானே, சிங்கம், நந்தி முதலியன தனிச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன. 8 ந் நூற்றுண்டு காஞ்சிக் கைலாசநாதர் ஆலய நந்தியும் விசேடம் பெற்றது. எல்லாவற்றிற்கும் மிக மேலாகத் தஞ்சைப்பிருக தீஸ்வரர் ஆலய மிகப் பிரமாண்டமான நந்தி உலகப் பிரசித்தி பெற்றது. இவ்வகையில் சிறப்பெய்திய நந்தி சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகளின் நாணயங்களில் அமைந்தது பொருத்தமானதே. 'யாழ்ப்பாண அரசர்களது மறந்தொழிந்த நாணயங்கள்' என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையில் செம்பிலமைந்த பல்வேறு வகைப்பட்ட நாணயங்களே நல்லூர் ஞானப்பிரகாச சுவாமிகள் விரித்துரைத்தனர். யாழ்ப்பாண அரசர்களும் பொல்லநறுவை அரசர்களும் சோழர் நாணயங்களேப் பின்பற்றினர்.

பொல்லநறுவை நாணயங்கள் இராஜரட்டை நாணயங்களின் பிரதிவடிவங்கள் போன்றன. ஆனல் யாழ்ப்பாண நாணயங்களின் முன்புறம் சோழ மாதிரிகள் போன்றமைந்தன. பின்புறம் யாழ்ப்பாண அரசர்களின் முடியும் சின்னங்களும் கொண்டன. இவை கலிங்கத்துக் கங்க அரசரின் நாணயங்களேப் பின்பற்றப்பட்டதென்று 'பண்டைக்கால இந்தியப்பொருள் ஆராய்ச்சி' என்னும் நூலில் டாக்கடர் ஹல்ற்ஸ் அவர்கள் கூறினர். இந்நாணயங்களில் நந்தியும், இதனைச் சேர்ந்த சூரியன், பிறை, இலிங்கம் முதலியன ஒருபக்கத்திலும், மறுபக்கத்தில் கிழக்கு கங்க அரசன் ஆனந்தவர்மனின் அரசாட்சி ஆண்டு 1078 கி. பி. பொறிக்கப்பட்டிருக்கிறது. இதே நூலில் ரூபர்ட் சிவெல் என்பார் சந்தேகிக்கக்கூடிய தென்னிந்திய நாணயங்களேப் பற்றிக் கூறிப் போந்தனர். இவை புராதன யாழ்ப்பாண நாணயங்கள் என்றே ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இந்நாணயங்களில், 'சேது' என்ற விளக்கவாசகம், இரு பிரிவாகச் 'சே' கீழும் 'து' மேலுமாக இருக்கிறது. நந்தி காணப்படவில்லே. மறுபக்கம் சோழர் நாணயம் போன்றது. இக்காலத்தில் நந்தி சின்னமாகச் சேர்க்கப்படவில்லே என்றே சொல்லவேண்டியிருக்கிறது. கலிங்கத்துப் பரணி என்னும் காவியம் சோழரால் வெற்றிகொண்ட கொடிகளேக் கூறுகையில்,

கேழன் மேழிகளே யாழி வீணே சிலே
கெண்டை யென்றினைய பல்கொடி
தாழ மேருவினுயர்த்த செம்பியர்
தனிப்புலி கொடி தழைக்கவே

என்று வீரமுரசு கொட்டுகிறது. இப்படியாயின் பன்றி, ஏர், மான், சிங்கம், வீணே, வில்லு, மீன் முதலிய கொடிகளேத் தாங்கியவர்களில், யாழ்வீணேயைக் கொண்டவர்கள் புராதன யாழ்ப்பாண அரசர்களா என்ற கேள்வி எழுகின்றது, வீணேக்கொடியைப் புராதன யாழ்ப்பாண அரசர்கள் கொண்டிருந்தால் அது 12 ந் நூற்றுண்டுக்கு முன்பாகவிருத்தல் வேண்டும். 12 ந் நூற்றுண்டுக்குப் பிற்பட்ட தமிழ் நூல்கள் நந்திக்கொடியையே கூறுகின்றன. கைலாயமாலே, 'அண்டருலக நிமிர்ந்தாடும் பரிகடைத்தாய்கொண்ட விடைகாட்டுங் கொடியினுன்', என்றும், 'வெற்றிவிடைக் கொடியார் மேலாரிய குலத்திலுற்ற மடப்பள்ளியிலுள்ளோரும்' என்ற கிள்ளே விடு தூதாலுங் காணலாம்.

இவ்வாலாறுகளால் நந்தி, பிறை, திரி சூலம் முதலியன நாணயங்களிலன்றிக் கொடிகளிலும் பொறிக்கப்பட்டதென்று அறியக்கூடியதாயிருக்கிறது.

(வானெலிப் பேச்சு)

---

# தொழில்களே இலங்கையர் மயமாக்குதல்

### தொழிலாளர் இலாகாவின் முயற்சி

தொழிலாளர் இலாகா நடத்திய ஒரு கணக்கெடுப்பின் பிரகாரம் கொழும்பு நகரில் உள்ள 70,977 வேலேயில்லாதவர்களில் 20,000 பேர் இலங்கையரல்லாதவர்கள் என்று தெரியவந்துள்ளது. இந்த 20,000 பேர்களில் 4,000 பேரிடம் தற்காலிக வாச அனுமதிச் சீட்டும் கிடையாது; "விசா" வும் கிடையாது.

தொழிலாளர் இலாகா தொழில்களே இலங்கையர் மயமாக்கும் கொள்கையை நிறைவேற்றுதற்காக இப் புள்ளி விபரங்களேச் சேகரித்தது.

கொழும்பிலுள்ள முதலாளிகள் தமது ஸ்தாபனங்களில் வேலேசெய்யும் இலங்கையரல்லாதார்களுக்குப் பதிலாக இலங்கையரை வேலேக் கமர்த்தும்படி கோரப்படவிருக்கிறுர்கள்.

மந்திரி சபை நியமித்திருக்கும் வேலேயில்லாப் பிரச்சினைபற்றிய உபகொமிட்டியின் தலைவரான தொழிலாளர் அமைச்சர் திரு. டி. பி. இலங்காரத்ந அரசாங்கம் இனிமேல் இலங்கையர் பார்க்கக்கூடிய வேலேகளில் அமர்ந்திருக்கும் இலங்கையரல்லாதார்களுக்கு தற்காலீக விசா அனுமதிச் சீட்டுகளேப் புதுப்பிக்கக்கூடாதென்று சிபார்சு செய்திருக்கிறுர்.



அபிதானகோச ஆசிரியர் திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

# ‘அபிதானகோச’ ஆசிரியர்

**திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள்.**

தமிழகத்தில் கலைக்களஞ்சியத்தை முதன்முதலாக வெளியிட்ட பெருமையை ஈழநாட்டிற்கு ஈட்டித் தந்தவர் திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களாவர். அவர் வெளியிட்ட ‘அபிதானகோசம்’ இப்பொழுது கிடைப்பது அரிது. இந்த நூலில் பிள்ளையவர்கள் எழுதியுள்ள முகவுரை ஈண்டு தரப்படுகிறது. இந்நூல் இலங்கை இராஜ மந்திர சபை அங்கத்தவருளொருவராய் விளங்கிய பிரபு சிகாமணி ஸ்ரீமான் பொ. குமாரசாமி முதலியாரவர்களுடைய வித்தியாபிமான ஞாபக சின்னமாகச் சமர்ப்பித்துப் பிரகடனஞ் செய்யப்பட்டது. இந்நூல் இற்றைக்கு 57 ஆண்டுகளுக்கு முன் அதாவது 1902ம் ஆண்டில் நாவலர் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

### முகவுரை

அத்திதன் பாதம் பத்திசெய் வோர்க்குப்
புத்தியுஞ் சித்தியும் கைத்தலக் கனியே.
திருவளர் பொதியத் தொருமுனி பாதம்
வருக சிறியேன் சிரமிசை யுறவே.

பூவுலகத்திலேயுள்ள பாஷைகளுள்ளே வடமொழியும் தென்மொழியும் மிக்க பழமையும், இலக்கண வரம்பும், நூற்பெருக்கமும், அதிப்புராதன இதிகாசங்களும்,

ஞானநூன் மலிவும், நாகரிகவளமுமுடைய பாஷைகளென்பது ஆய்ந்தோர் துணிபாம். இருபாஷையாளரும் வைதிக சமயிகளே யாதலின் வேதபுராணேதிகாசங்களும், தரும நூல்களும், ஏனைய சாஸ்திரங்களும் இருவர்க்கும் பொது நூல்களேயாம். ஒரு நூலிலே ஒருவர்பெயர் கேட்கப்படும்போது அவர் யாரென்றலும், எக்காலத்தவரென்றலும், யாது செய்தாரென்றலுமாகிய இன்னோரன்ன வினாக்கள் உதித்தல் வித்தியார்த்திகள் கண்ணும், வித்தியா விநோதர்கள் கண்ணும் இயல்பேயாம்.

ஆதலின், வேதாகமபுராணேதிகாசங்களிற் கூறப்பட்ட தெய்வங்கள், தேவர்கள், இருஷிகள், முனிவர்கள், அசுரர், யக்ஷர், கந்தருவர், கிந்நரர், அவதாரபுருஷர், பக்தர், அரசர், வள்ளல்கள், வித்துவான்கள் முதலியோர் சரித்திரங்களும், புண்ணிய க்ஷேத்திரம், நதி, தடாகம், விருக்ஷ முதலியவற்றின் வரலாறுகளும், தமிழ்நாட்டுப் பண்டைக்காலத்து அரசர் புலவர், வள்ளல்கள் முதலியோர் சரித்திரமும் நூல்களின் வரலாறுகளும், வைதிக சாஸ்திரக் கொள்கைகளும் ஆராய்ந்துணர்தல் தமிழ் கற்போர்க்கும், தமிழ்க் கலாவிநோதர்க்கும் இன்றியமையாதனவாம். அதுமாத்திரமன்று ஆசிரிய கர்ண பரம்பரையாகப் பாடங்கேட்ட வழியன்றி மற்றெவ்வகையானும் பொருள் காண்டற்கரிய செய்யுளுமோ எண்ணில. அவை பெரும்பாலும் சரித்திரமுணர்ந்தாலன்றி அர்த்தமாகா. "துந்துவெனுந் தானவனைச் சுடுசரத்தாற்றுணித்தானும்" என்றும், "வஞ்சம்படுத்தொருத் திவாணாள் கொள்ளும் வகை கேட்டஞ்சும் பழைய னூராலங்காட்டெம் மடிகளே" என்றும், வருவன வற்றுக்குச் சரித்திரவுணர்ச்சியின்றிப் பொருள் காணுதல் கூடாது. இச்சரித்திரங்கள் யாண்டுளவென்று தேடியறிதலும் எளிதன்று. இவ்வாற்றான் முட்டுறும் மாணாக்கர்க்கும் மற்றோர்க்கும் பெரும்பாலும் பயன்படுமாறு ஒரு நூலை இது காறும் தமிழிலே எவருஞ் செய்திலர். அது நோக்கியே இந்நூல் அக்ஷர அடைவாக வகுத்துச் செய்யப்பட்டது. இந்நூல் தொடங்கிப் பதினாறு வருஷமாயின. ஆகியும் இந்நூல் நிரம்பா நூலேயாம். தமிழிலேயுள்ள நூல்கள் எத்தனை லக்ஷம்! வடமொழியிலேயுள்ள நூல்கள் எத்தனை கோடி! அவைகளிலே கூறப்பட்ட தேவர், அசுரர், முனிவர், அரசர் முதலியோர் பெயர்கள் எத்தனை லக்ஷகோடி! அவற்றை யெல்லாம் ஒருங்கேயளந் தெல்லை கண்டுவிட்டேம் என்று நடிப்பாமல்லேம். எத்தனையோ பண்டிதர்கள் கூடித் தம்முள்ளே விதாயம் பண்ணிக்கொண் டெத்தனையோ கால மாராய்ந்து நிதானித்துத் திரட்டியெடுத் தியற்றற்பாலதாகிய நூலையாஞ் செய்யப்புகுந்தது, குளந்தோண்டற்பாலதாகிய விடத்திலே காடைசிறகாற் சிறுகுளி செய்ததுபோலாம். எமதறிவின் சிறுமையையும், அவ்வறிவு கொண்டளப்பான் புகுந்த கலைக்கடற் பெருமையையும் நோக்குங்கால் நகைமுகமே தோன்றுமென்னு முண்மைபற்றியே, நிரம்பிய அறிவுடையோர்க்கு இந்நூலின்கண்ணேயுள்ளே நிரம்பாமை உவப்பாகுமென வுள்ளந் துணிந்தேம்.

இந்நூலிலேயுள்ளனவெல்லாம் பெரும்பாலும் பல நூல்களினின்றும் உள்ளவாறாகவும், சங்கிரகமாகவும், சூசனமாகவும், விரிவாகவும் வகுத்தியற்றப்பட்டனவேயாம். நமது மதமாகவும் ஊகமாகவுமுள்ளன மிகச் சிலவேயாம். இந்நூலகத்தே வருங்கால நிரூபணமெல்லாம் பிரபல வேதுக்களைக்கொண்டு துணியப்பட்டனவேயன்றி வாளா கொள்ளப்பட்டனவல்ல. ஆவசியகமாகத் தோன்றிய விடங்கடோறுமே பிரமாணமெடுத்துக்காட்டினோம். ஏனையவற்றில் விரிவஞ்சியுஞ் சாமானிய நோக்கியும் அஃதொழிக்கப்பட்டது.

இந்நூலைக் கொழும்பு நகரத்திலே பிரபு சிகாமணியாகவும், வித்தியா விநோதராகவும், ராஜமந்திரதராகவும் விளங்குபவராகிய **ஸ்ரீமான் பொ. குமாரசுவாமி முதலியாரவர்கள்** வித்தியாபிமான ஞாபக சின்னமாக நின்று நிலவுமாறு சமர்ப்பித்து பிரகடனஞ் செய்தாம். இந்நூற் பிரகடனச் செலவிலொரு பாகம் தாம் பொறுப்பதாக வாக்களித்து இந்நூலை மெச்சிக் காலந்தோறுந்திருமுகம் விடுத்தெம்மை யூக்கிவிட்ட முதலியாரவர்கள் பெருந்தகைமைக்குக் கைம்மாறு காண்கிலேம். இந்நூலிலொரு பாகத்தைக்கண்டு மெச்சித் திருமுகமனுப்பித் தமக்கு நூறு பிரதிகள் அனுப்புமாறு அநுஞ்ஞை செய்த பாலவனத்தம் ஜமீந்தாரும், திசையெல்லாந் தன் புகழ் நிறுத்திய **பொன்னுச்சாமி நரேந்திரன்** தவப்புதல்வரும், மதுரைப் புதிய தமிழ்ச் சங்க ஸ்தாபகரும், வித்துவ சிகாமணியும், பரம்பரையாகத் தமிழ் வளர்த்த, குலதிலகருமாகிய **ம. ரா. ரா. ஸ்ரீ. பாண்டித்துரைத் தேவரவர்கள்** வித்தியாபிமானமும், உதாரகுணமும் நம்மனத்தை விட்டகலா.

யாழ்ப்பாணத்திலே வித்தியா பீடமாய், உத்தியோகம், உயர்குடிப் பிறப்பு, செல்வ முதலியவற்றானுயர்ந்து விளங்குபவராகிய **ஸ்ரீமான் கு. கதிர்வேற்பிள்ளையவர்களும், ஸ்ரீமான் அட்வகேட். அ. கனகசபைப்பிள்ளையவர்களும், ஸ்ரீமான் பிறக்டர் வி. காசிப்பிள்ளையவர்**களும் இந்நூற் பிரகடனத்திற் குபகாரிகளாயினமைக்காக அவர்க்குப் பெரிதுங் கடப்பாடுடையேம்.

நாவலர் கோட்டம்
யாழ்ப்பாணம்
கலியுகம் ருகூகூ

**ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.**

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

## திரௌபதி சுயம்வரம்

71. முழுதுணர்ந்த அன்னையரே நீர் முன்
மொழிந்த மொழி அப்படியே.
72. குழுவுடனே தான் வாழ்வோமென்று
கூறியவர் அங்கிருந்தார்.
73. இருந்திடவே அந்த ஏந்தல்
வேந்தன்யாக சேனனென்பான்.
74. தெரிந்து மறுநாளதனில்
சேரவனைத்தோ கொண்டு போய்.
75. பரிந்து சுபமு கூர்த்தமிட்டு நல்ல
பண்புடைய தென்மியரால்
76. பண்புடைய வேத விதிப்படி
பன்முறையாய் மன்றல் செய்து
77. நண்புடனே வாழ்வோமென்று
நாடியவர் அங்கிருந்தார்.

அன்னை குந்தியின் ஆசிபெற்று திரௌபதி பாண்டவர்களுடன் இருந்தபோது பாஞ்சால ராசன் அவர்களைத் தேடிவந்தான். அனைவரையும் அழைத்துக் சென்று வேதவிதிப்படி திரௌபதியைப் பாண்டவர்களுக்குத் தாரைவார்த்து மணம் செய்து வைத்தான். பாஞ்சால மன்னவன் கதையின் இறுதிக்கட்டடம். ஆகவே தருவும் மாறுகிறது.

தந்தனதன தனதன தனதனன
தனனதன தந்தன தந்தனனை.

தருவைத் தொடர்ந்து கவிதை உச்சநிலையை அடைகிறது.

78. இந்த மடமங்கையர்கள் எல்லாருமாக
ஏகபரனை கரிமுகவனை வணங்கி.
79. பரிந்து பாஞ்சாலியது பாதமலர் போற்றி
பாவையர்கள் ஊஞ்சலிசைபாடினரே.

ஊஞ்சலாட்டக்காரர்களுடன் சேர்ந்து இதுவரை நாம் திரௌபதி சுயம்வரக் கதையை ஊஞ்சற் கவிதைகளாகக் கேட்டோம். ஊஞ்சலின் வேகம் குறைகிறது. கதை முடியப்போகிறது என்பதற்கு அறிகுறியாகத் தான் ஊஞ்சலும் சோர்ந்தது. கதாசிரியர் கிழக்கு இலங்கையில் வழங்கும் திரௌபதி சுயம்வரக்கதையினுக்கு இறுதியாக மங்களம் பாடி முடிக்கிருர்.

80. திசையெல்லாம் புகழ் பெற்ற பஞ்சவர்களுடனே
திரௌபதி தேவியும் சேர்ந்தருள் சுரக்க
81. அருள் பெருகு கோயிலுடனே மாயன் வாழும்
ஆலயமதென்னுளும் தழைத்திடவே
82. மருந்தனைய சிவபெருமான் அடிபணிந்தேன்
மாண்பான பாரதத்தூஞ் சலிசை சொன்னேன்.
83. வா[illegible] ருபாதமலர் வாழி
வ[illegible] வருடனே வாழவாழி
84. வேளையருள செய்த கண்ணன் பாதமலரை
வேண்டிநின்றோர் நிதம் வாழவாழியவே
85. தண்ணனுடைய தொ நதமிழ் மொழி வாழி
தகைமை [illegible] ள் தானுமே வாழ
வாழியவே.

---

## [illegible]நிப்புரை

1. நாமும் எமது சூழலும்—இரண்டாம் வகுப்பு
விலை ரூபா 1-00
2. நாமும் எமது சூழலும்—மூன்றும் வகுப்பு
விலை ரூபா 1-25

ஆசிரியர்: புன்னாலைக்கட்டுவன், இ. தர்மலிங்கம்.
பதிப்பு: சுன்னுகம் வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

இப்பொழுது ஆரம்ப வகுப்புகளுக்குச் 'சூழல்' என்பது புதுப் பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது இந்தப் பாடத்துக்கு ஏற்ற நூல்களை, இளைஞர்கட்கும் சரித்திர நூல்கள், இயற்கைப் பொருட் பாடநூல்கள் நாட்டுச் சீவன சாத்திர நூல்கள் முதலியவற்றை எழுதிப் போதிய அனுபவம் வாய்ந்த திரு. இ. தர்மலிங்கம் அவர்கள் எழுத முன்வந்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். இரண்டாம் மூன்றும் வகுப்புகளுக்கேற்ற நூல்கள் இப்பொழுது வெளிவந்துள்ளன. மனிதனின் வாழ்வு ஓரளவு சூழலைப் பொறுத்தும் உருவாகிறது. இதனைப் பல உளவியல் வல்லுநர் ஒப்புக்கொள்கின்றனர். எனவே குழந்தைகள் தங்கள் சூழலைச் சுலபமாக அறிந்துகொள்ளக்கூடியவாறு பாடங்கள் அமைதல் வேண்டும். அறிந்தோ அறியாமலோ குழந்தைகள் விஞ்ஞானத்தின் நன்மைகளை அனுபவித்து வருகின்றனர். அவற்றையும் அவர்கள் படிப்படியாக அறிந்து கொள்ளவேண்டும். நமது நாட்டைப்பற்றி அறிந்திருக்க வேண்டிய குழந்தைகள் நமது அயலவர்களையும் அறிந்தவர்களாக இருக்க வேண்டும்.

பிள்ளைகள் தம் சூழலைப் பார்க்கவும் அறியவும் மகிழவும் கூடிய முறையில், இந்நூல்கள் பிள்ளை (நாம்) வீடு, பாடசாலை, அயல் என்று வகைப்படுத்தி எழுதப்பட்டுள்ளன. சிறுவர் விருப்புடன் படித்தின்புறக்கூடிய முறையில் பல்வகைச் சிறப்புகளுடன் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நூல்களில் வர்ணச் சித்திரங்கள் பல சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். சிறந்த நூல்களை வெளியிடுவதில் பேர் பெற்று விளங்கும் வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம் இந்நூல்களை அநேக அழகிய வர்ணப் படங்களுடன் உயர்ந்த காகிதத்தில் சிறப்புற வெளியிட்டிருக்கிறது.

## அரசாங்க பிரசு[illegible] நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | விலை ரூ. ச. | தபாற் செலவு ரூ. ச. |
|---|---|---|
| 1956 ம் ஆண்டின் 21 ம் இலக்க வெடிமருந்துச் சட்டம் .. | 0 45 .. | 0 10 |
| 1956 ம் ஆண்டின் 51 ம் இலக்க, முஸ்லீம் பள்ளிவாசல்கள், தரும நம்பிக்கைச் சொத்துக்கள் அல்லது வகபுகள் சட்டம் .. | 0 85 .. | 0 20 |
| 1936 ம் ஆண்டி[illegible] ம் இலக்கம், ஒத்துழைப்புச் சங்கங்களின் அமைப்பு முறையும் அதிகாரிப்பையும் பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திரட்டித் திருத்துவ[illegible]ற்கான சட்டம் .. .. | 0 25 .. | 0 20 |
| 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்கச் சட்டம் ஸ்தல அரசாங்க சேவையை அமைப்பது ஒழுங்குபடுத்துவது முதலிய ஏற்பாடு செய்வதற்கான ஒரு சட்டம் .. .. .. | 0 40 .. | 0 20 |
| கிராமச் சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 148) - மறுபதிப்பு .. | 1 30 .. | 0 25 |
| 1947 ம் ஆண்டின் 17 ம் இலக்கம் கிராம சமுதாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. .. .. | 0 10 .. | 0 10 |
| 1953 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டம் .. .. | 0 35 .. | 0 15 |
| 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்கச் சட்டம் கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவும் அதைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்குமான சட்டம் .. .. | 0 45 .. | 0 20 |
| 1946 ம் ஆண்டின் 32 ம் இலக்கச் சட்டம் - நீர்ப்பாசனத்தைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்கான சட்டம் .. | 1 10 .. | 0 20 |
| 1951 ம் ஆண்டின் 13 ம் இலக்க முஸ்லீம் விவாக, விவாகரத்துச் சட்டம் .. | 1 50 .. | 0 20 |
| 1954 ம் ஆண்டின் 31 ம் இலக்க முஸ்லீம் விவாக, விவாகரத்து (திருத்த)ச் சட்டம் .. .. .. | 0 10 .. | 0 10 |
| அத்தியாயம் 104 தத்துவப் பத்திரங்கள் .. .. | 0 20 .. | 0 10 |
| அத்தியாயம் 120— வியாபாரப் பெயர்கள் .. .. | 0 40 .. | 0 10 |
| 1951 ம் ஆண்டின் 17 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டம் .. | 1 35 .. | 0 20 |
| 1953 ம் ஆண்டின் 15 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் | 0 15 .. | 0 10 |
| 1954 ம் ஆண்டின் 30 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் | 0 10 .. | 0 10 |
| 1954 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டம் - தாங்கள் செய்துவரும் வேலைக் கிரமத்திற் சேதமடையும் வேலையாட்களுக்கு நஷ்ட பூர்த்திப் பணம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கான சட்டம் .. | 0 35 .. | 0 20 |
| 1935 ம் ஆண்டில் ஏற்படுத்திய வேலையாட்கள் நஷ்ட பூர்த்தி விஷய ஒழுக்க விதிகள் .. .. | 0 35 .. | 0 20 |
| அத்தியாயம் 91— நொத்தாரிஸ்மார் (1938 ல் திருத்தியமைக்கப்பட்டது) | 1 30 .. | 0 35 |
| 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டம்—இலங்கையிலே முடிக்குரிய காணியின் கிரமமான பண்படுத்தலுக்காகவும் பராதீனப்படுத்துதலுக்காகவும் ஏற்பாடுசெய்வதற்கான சட்டம் .. .. | 0 55 .. | 0 35 |
| 1946 ம் ஆண்டின் 3 ம் இலக்கச் சட்டம் — ஊர்ச்சங்கங்கள் .. | 2 90 .. | 0 35 |
| 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டம் - வேலையாட்கள் சம்பளச் சங்கச் சட்டம் .. .. .. | 0 50 .. | 0 20 |
| அத்தியாயம் 95, கலியாணப் பதிவுச் சட்டம் .. .. | 0 55 .. | 0 20 |
| 1945 ம் ஆண்டின் 20 ம் இலக்க கலியாணப் பதிவுத் திருத்தச் சட்டம் | 0 50 .. | 0 10 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகவற் பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.